

வண்ணக்
களஞ்சியம்

# மாதுளை



தொகுப்பாசிரியர் :

சேதுநம்மவன்

வெளியீடு :

மா. முத்து (ஓவியன்)

வண்ணக்களஞ்சியம்.

11. சிவன்கோயில் தெற்குத் தெரு,

புலியூர், சென்னை—24.

சென்னை,
15—9—68

விலை :
ரூபாய் ஒன்று.

முதற்பதிப்பு, செப்டம்பர் 1968
உரிமை பதிப்பகத்தாருக்கே
வெளியீடு—6

முகப்புப்படம் உதவி :
கோவை இளஞ்சேரன்
(நாகைத் தமிழ்ச் சங்கம்.)

★

பிளாக்குகள் :
நியூட்டன் – அன் கோ,
சௌடையா பிராசஸ்.

★

அச்சிட்டோர் :
சத்தியா அச்சகம்
சென்னை-21.

# நன்றியுரை

அறிஞர் அண்ணா அவர்களை எனக்கு முதன் முதலில் அறிமுகமாக்கி வைத்த பெருமை திரு. இரா. சத்தியேந்திரன் (தற்போதைய இரண்டாவது மாகாண நீதிபதி) அவர்களைச் சாரும். இந்த வாய்ப்பு 1949ஆம் ஆண்டில் சென்னை மண்ணடி பவளக்காரத் தெருவின் ஓர் இல்லத்தில் எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்தே அறிஞர் அண்ணாவின் தம்பி மார்களில் ஒருவனாகவே நான் வாழ்ந்து வருகிறேன்.

மதுரையில், அண்ணாவின் 'வேலைக்காரி' திரைப்படம் திரையிடப்பட்டபோது அதற்கு விளம்பரங்கள் (பேனர்கள்) எழுதி மதுரை மக்களின் நன்மதிப்பையும், பட அதிபர்களின் பாராட்டையும் பெற்றதுடன் எனது தொழில்துறைக் குருவின் பூாராட்டையும் பெற்றேன்.

சென்னை வந்த நேரத்தில் அண்ணாவின் அறிமுகம் கிடைத்ததும் மேலும் மேலும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டியவனானேன். அதனையொட்டி அண்ணாவின் 'சொர்க்க வாசல்' நூலுக்கு முகப்போவியமும், திருச்சி (மாநில தி. மு. க.) மாநாட்டில் குறளோவியங்களுக்கு விளக்கப் படங்களும் வரைந்ததன் மூலம் அண்ணாவின் பாராட்டும் கிடைத்தது !

பிறகு "காஞ்சி" இதழ்களில் "பாண்டியன் திருமேனி" அண்ணாவின் "இரும்பு முள்வேலி", "வண்டிக்காரன்மகன்" "ரொட்டித் துண்டு" ஆகிய கதைகளுக்கு ஓவியங்கள் தீட்டும் பெரும் வாய்ப்புக்கள் கிடைத்தன. இந்த அரிய வாய்ப்பைத் தான் என் வாழ்நாளின் பெரும் பேருக எண்ணி மகிழ்ச்சி யடைகிறேன்.

சிறுவயதிலிருந்தே முற்போக்குக் கருத்துக்களினால் உந்தப்பட்டு வளர்ந்த எனக்கு அறிஞர் அண்ணா அவர்களின் தெளிவுரைகளும் கருத்துரைகளும் மேலும் ஊக்கமளித்து ஒரு உறுதியான வழியைக் காட்டின. அவ்வழி பிறழாது என்பயணம் தொடர்ந்தது.

புதுமுறை 'ஆட்டோகிருப்' எனும் பெயரில் கையெழுத்து வாங்கும் ஒரு புதிய முறையை (தலைவர்களின் புகைப்படங்கள் அடங்கியதை) நான் வெளியிட்டபோது எனக்குக் கிடைத்த பாராட்டுக்கள் எராளம். பிறகு அண்ணாவைப் பற்றி ஆங்கிலக் கவிதை ஒன்று 1958ல் பொங்கல்வாழ்த்துடன் நான் வெளியிட்

டபோதுதான் 'அண்ணாவுக்காக நம் தொண்டு என்ன' என்ற பெருங் கேள்வி என் மனதில் எழுந்தது. என் அறிவுக்கெட்டிய வரையில் பல நாள் சிந்தனைக்குப் பிறகு "மாதுளை" எனும் பெயரில் இந்நூலின் கருத்து விடையாகக் கிடைத்தது. ஆனால் இதனை ஆக்கிப் பெறும் பெரும்முயற்சியில் நான் பல நூலாசிரியர்களை அணுகியும் எனக்குத் தோல்வியே கிடைத்தது என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். கடைசியில் தான் 'விடுதலை' நாளிதழில் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. சேதுநம்மவன் அவர்கள் கிடைத்தார். அவரிடம் நான் இக்கருத்தைத் தெரிவித்தபோது, பெருமகிழ்ச்சிக்கொண்டதுடன் எனக்கும் ஊக்கமளித்து 12 நாட்களிலேயே பல்வேறு இதழ்கள், நிகழ்ச்சிப் பேருரைகள் ஆகியவற்றைத் தேடி எடுத்து இத் தொகுப்பினை முடித்துக் கொடுத்தார்கள். தொகுப்பை முழுவதும் படித்தேன். நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. திரு. சேது அவர்கள் நல்லவர். நம்மவர் இளைஞர். இந்நூல் உருவாக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு நான் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். அவர் நல்ல முறையில் வாழ வேண்டும். வளர வேண்டும். மேலும் பல நூல்களை எழுதி வண்ணக்களஞ்சியத்தை வளமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் நன்றியுடன்.

இதனைச் சிறப்பாக அச்சிட்டு எனக்கு உதவ வேண்டும் என பெரிய மனதுடன் முன்வந்த பெருந்தகை நண்பரும் உயர்திரு. உமாபதி M.A.,L.T. (Dip-in-Geog.) அவர்களின் மருமகனுமான திரு. சத்தி அவர்களுக்கும் (உரிமையாளர் சத்தியா அச்சகம்) உடனிருந்து பணியாற்றிய அன்புச் செல்வன் அவர்களுக்கும் என் நன்றி.

எனது இப்பணிக்கு தமிழக மக்களும், மற்றவர்களும் ஆதரவு தருவதுடன், குறைகள் இருப்பின் மன்னிக்கவும் வேண்டுகிறேன்.

வாழ்க வாழ்க, பல்லாண்டு அண்ணா !

வணக்கம்

மா. முத்து
(ஓவியன்)
"வண்ணக்களஞ்சியம்"
சென்னை —24.

# மாதுளை

இத்தொகுப்புநூல் தமிழகமுதல்வர் பேரறிஞர் அண்ணாவின் பல்வேறு கருத்தோவியங்கள் அடங்கிய நூலாகும். தமிழகத்தின் முன்னோடி, தென்னகத்தின் உயிர்நாடி, உலகப் பெரு மூத்த குடி தமிழினத்தின் உயர்வுக்காக வென்றே வந்துதித்த அடலேறு அண்ணாவின் அறுபதாவது பிறந்த நாள் விழாவிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்நூல் வெளியிடப்படுகிறது. இப்படி ஒரு நூலை 'அண்ணாவின் **மணி** விழா'வை முன்னிட்டு வெளியிடவேண்டுமென்று எனது பெருமதிப்புக்குரிய நண்பரும், அண்ணாவின் அன்பிற்குப் பெரிதும் பாத்திரமானவரும், சிறந்த ஓவியரும், வண்ணக் களஞ்சியம் நூல் வெளியீட்டகத்தின் உரிமையாளருமான திரு. முத்து அவர்கள் கூறியபோது இதற்கான தலைப்பையும் அவரே 'மாதுளை' எனக் கூறிவிட்டார். அவரது இத் தலைப்பைப் பற்றி மறுத்துரைக்கும் துணிவோ, விளக்கம்பெறும் சிக்கலோ தேவையில்லாததால் நான் எனது மகிழ்ச்சியினை அவருக்குத் தெரிவித்துக்கொண்டேன். அதன் பிறகு மூன்றெழுத்தின் (த மி ழ், அன்பு, அறிவு, ஆகிய) பெருமையும், அம்மூன்றெழுத்துப் பொருள்களுக்கு முழுதுமே அதிபதியான அண்ணாவின் அறிவொளியும் என் மனதில் நிழலாடத் தொடங்கியது.

முப்பாலின் ஒளி, மூவேந்தரின் விவேகம், முக்கொடி யின் (விற்கொடி—புலிக்கொடி—மீனக்கொடி) பெருமை, மும்முரசின் (மங்கல முரசு-வெற்றி முரசு—கொடை முரசு) வலிமை, முந்நதியின் (பொருணைநதி—காவிரிநதி வைகைநதி) அருமை, முத்தமிழின் சுவை, முக்கனிச் சாறின் இனிமை, அத்தனையையும் ஒட்டு மொத்த மாகத் தன்பாற்கொண்ட அண்ணா!—அண்ணாவின் கருத் துக்களையே முழுக்க முழுக்கத் தன்பாற் கொண்ட இந் நூல் 'மாதுளை'!—மாதுளை வெளியீட்டைத் தன் பாற் கொண்ட முத்து!....

—இப்படி எண்ணி எண்ணி என் மனம் மகிழ்ச்சிப் பெருக்கில் குதியாட்டம் போடத் தொடங்கியது. அத் தோடு நில்லாமல் மணிவிழாக்காணும் அண்ணாவின் சொற் சுவை, கருத்துச் சுவை, அறிவுச் சுவை ஆகிய முச் சுவைக்கும் ஏற்றவாறு, பல 'மணி'களைத் தன்பாற் கொண்டு துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு ஆகிய முச் சுவை யையும் தரும் 'மாதுளை' எனும் பெயர் இந் நூலுக்கு மிகமிகப் பொருத்தமானதும் என்பதால் நான் மேலும் மேலும் ஊக்குவிக்கப்பட்டு இதனை மிக ஆர்வத்துடன் தொகுத்துள்ளேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பல் வேறிடங்களில், பல் வேறு துறைகள் பற்றியும், பல்வேறு துறையினர் பற்றியும் எடுத்துரைத்த விளக்கங்களும், அவர் எழுதிய கட்டுரைகள் மூலம் தெரிவித்துள்ள அரும்பெரும் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த கருத் துக்களும், ஒவ்வொன்றும் தனித்தனியாக 60 தலைப்புக் களுடன் ஆதாரக் குறிப்புக்களோடு இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆனால் என்னால் முடிந்தவரை— என் அறிவுக்கெட்டியவரையில்தான் நான் சேகரித் துள்ளேன். அண்ணா அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபட்ட

பிறகு நான் அறிந்த வரையில் "இயற்கையின் ஒளிவீச்சுப் புகாத இடமே இல்லை" என்பது போல், அவர் சொல்லாத கருத்துக்களே, எடுத்துரைக்காத அறிவுவிளக்கங்களே இல்லை. ஆகவே அத்தனையையும் சேகரிக்கும் ஆற்றலும் எனக்கில்லை என்பதை ஒளிக்காமல் ஒப்புக்கொண்டு குற்றம் குறை இருந்தால் மன்னிக்கும்படியும் வாசகர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.


இதனைத் தொகுத்துத் தரும் வாய்ப்பை எனக்களித்த திரு. முத்து அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு 'மணி விழா'க் காணும் அறிவுப் பேரரசு அண்ணா அவர்களுக்கும் எனது சிரந்தாழ்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாதுளையில் எத்தனையோ மணிகளுண்டு சுவைகளுண்டு
மனிதநோய் போக்கும் நல் மருந்துவகை தானு முண்டு!
—அதேபோல்

அறிவுக்கோர் மாதுளையை அறிஞர் அண்ணா
அளித்துள்ளார் அளித்துள்ளார் பல நாள் முன்பே!
—எனவே

இனிமேலும் தயங்குவது தவறு
தவறு
எடுத்துண்டு தமிழினமே உயரு
உயரு

**—சேதுநம்மவன் (கோவனூர்)**
**15—9—68**





பெருமை யுடையார் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்

# தென்னவரின் அண்ணன்

1909-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் காஞ்சியில், திரு. நடராசனார் - பங்காரம்மாள் தம்பதிகளின் செல்வமாகப் பிறந்தார் அண்ணா !

“விளையும் பயிர் முளையிலேயே” தெரிந்ததைக் கண்ட பெற்றோர் தாங்கள் சாதாரணக் குடும்பத்தினராயிருந்தும் அவரது படிப்பில் முழுக் கவனத்தைச் செலுத்தினர்; அல்லும் பகலும் அயராதுழைத்தனர். பள்ளி!—உயர்நிலைப் பள்ளி!! — கல்லூரி!!!—என்று படிப்பில் வெற்றிவீரராக முன்னேறிக் கொண்டு சென்ற அண்ணா அவர்கள் 1935-ஆம் ஆண்டில் “எம். ஏ” பட்டத்தினைப் பெற்றார்கள். பிறகு முதன்முதலில் ஒரு பள்ளி ஆசிரியராகப் பொறுப்பேற்றார்; தொடர்ந்து ‘நவயுகம்’ எனும் வார இதழுக்கு கேலிச்சித்திரங்களும்தீட்டினார்.



நாளடைவில் அரசியல் துறை அவரைச் சுற்றி வட்டமிட்டது. 1936ல் நீதிக் கட்சி மூலம் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய அண்ணா அவர்கள் தமது பொதுவாழ்வில்கண்ட பூகம்பங்கள் எத்தனை எத்தனையோ! சந்தித்த எரிமலைகள் எத்தனை எத்தனையோ !! நீந்திக் கடந்த நெருப்பாறுகள் எத்தனை எத்தனையோ !!!


எத்தனையோ !!!!! எத்தனையோ !!!!!!!!

அத்தனையையும் எப்படி வென்றார்; ‘எதனால்’ வென்றார் என்பதற்கான ஓர் விளக்கம்தான் உள்ளே............

# பெரியாருக்காக...

## (1)

"காந்தியார் பெரியாரின் மாளிகையிலே தங்கியிருந் திருக்கிருர்; காந்தியின் நினைவாக தன் தமக்கையின் பெண்ணுக்கு 'காந்தி' என்றே பெயர் வைத்திருக்கிருர் பெரியார். காந்தியாரின்



படத்தைக் கொளுத்துவேன், அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன் என்று பெரியார் (ஈ.வெ.ரா.) சொன்ஞரென்ருல் அவருக்கு அவைகளின்பேரில் இருக்கிற வெறுப்பிஞல் அல்ல! தேசியக் கொடிக்கு—தேசியச் சட்டத்திற்கு இழுக்கை உண்டாக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் அல்ல; 'இவைகளை எந்தக் காரணத்திற்காக கொளுத்தச் சொல்லுகிறேன்; கிழிக்கச் சொல்லுகிறேன்' என அவர் எடுத்துச் சொல்லுகிருரோ அந்தக் குறைபாடுகளையெல்லாம் நீக்கு

வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்' என்பதற்காக—அவர்களுடைய கவனத்தைக் கவர்வதற்காக சொல்லப்படுகிற விஷயங்கள்தான். அவர் எந்தக் காரணங்களுக்காக உள்ளம் குமுறிக்கொண்டிருக்கிருரோ அவைகளை நிறைவேற்ருதவரையில் 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை என்ருலும்கூட சட்டத்தின் நோக்கம் நிறைவேருது. பெரியார் ஒரு 'அதிர்ச்சி' வைத்தியம் செய்கிருர். பெரியார் அவர்களை நீங்கள் 'பித்தம் பிடித்தவர்' என்று கருதலாமே தவிர உலகத்தில் பெரும் பகுதியினர் அவ்வாறு கருதவில்லை. அரசியல்சட்டத்தைக் கொளுத்துவதன் மூலம் அவர்கள் இன்று சாதி அடிப்படையிலே இருக்கும் பல குறைகளை வெளிப்படுத்துவதற்காகத்தான்! "அரசியல் சட்டம் என்ருல் அது என் வாழ்விற்காக இருக்கிறது; அது என்னை மனிதனுக ஆக்குகிறது; என்னை நல்லவனுக இருக்கச் செய்கிறது. எனக்கு நாட்டில் மதிப்பு அளிக்கிறது!" என்று நாட்டில் உள்ள மக்கள் ஒவ்வொருவரையும் உணரச் செய்தால், அதை யாருமே தீண்டமாட்டார்கள்.

**11—11—57ல் தேசீய கௌரவ அவமதிப்புச் சட்டத்தை எதிர்த்து தமிழக சட்டமன்ற பேரவையில்....**

# சட்டம் போடுவோர் கவனத்திற்கு...!

(2)

"பசி ஐயா! நாலு நாட்களாகப் பட்டினி! பாதை ஓரத்திலே இருந்தது பொட்டலம்! கமகம வென மணம் வீசிற்று! எடுத்தேன், பிரித்தேன், தின்றுவிட்டேன்!! என்று சோற்று மூட்டையை களவாடித் தின்றுவிட்டவன் கூறக்கூடும்—உருக்கமுடன்—கேட்போர் மனம் உருகும் விதமாகக்கூட!—ஆனல் வழக்குமன்றம்......

உண்மையாக அவனுக்குப் பசியா நாலு நாட்கள்பட்டினியா? என்று கேட்காது; அறிந்துகொள்ளமுயற்சி எடுத்துக் கொள்ளாது. "அவன் அந்தச் சோற்று மூட்டையை எடுத்தான, பிரித்தான, தின்முன, அந்த மூட்டை வேருருவனுடையதா" இவை பற்றித்தான் கேட்கும்; அறிந்து கொள்ளும்; அறிவிக்கும். அந்தக் கட்டம் முடிந்ததும் அந்தச் செயல் குற்றம் என்று கூறும் கட்டம்; பிறகு அந்தக் குற்றத்துக்கு என்னவிதமான தண்டனை தரப்படலாம் என்ற சட்டம் காட்டப்படும் கட்டம்; அதன் பிறகு தண்டனை அளிக்கப்படும் கட்டம். வழக்குமன்றத்தின் வேலை அவ்வளவோடு முடிவடைகிறது. தீர்ப்பைக் கூறி விட்டு கசியும்கண்ணீரைத் துடைத்துக்கொள்ள, குமுறி எழும் பெருமூச்சை அடக்கிக்கொள்ள, வழக்குமன்றத் தலைவர் (நீதிபதி) தமது தனி அறைக்கோ, மாளிகைக்கோ செல்லலாம்!—மன்றத்திலே; சட்டம் காட்டும் வழிதான் நிற்க வேண்டும். சட்டம் செய்பவர்கள் இப்படிச் சட்டம் செய்யலாமா? எண்ணிப் பார்க்க வேண்டாமா"

—17—7—60 "திராவிடநாடு"

# சட்டமும்—சமூகமும்

(3)

"சட்டம் தூய்மையான உள்ளத்துடன் நெறி தவரு முறையில் இயற்றப்பட்டாலும், இயற்றியவர்கள் சமூகத்தில் எவ்விதமான அமைப்பு இருக்கவேண்டுமென்று விரும்பி, அதனைத் தமது குறிக்கோள் ஆக்கிக்கொள்கிறார்களோ, அதனை நிலை நிறுத்தவும், மற்றவர்களும் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் ஏற்றுக்கொள்ளவும் செய்வதற்காக வடித்தெடுக்கப்படும் கருவி—வேறென்ன! சமூக அமைப்பிலே ஒரு அடிப்படை மாறுதல் தேவையென்று நெஞ்சார உணர்ந்து, அதற்கான குறிக்கோளை சமைத்தளிக்கும் ஒரு இயக்கம் அல்லது



சிலர் அந்த குறிக்கோளுக்காக பாடுபடும்போது, ஏற்கனவே உள்ள சட்டங்களின் காரணமாக வழக்குமன்றம் இழுக்கப்பட்டால் வருத்தமடையாது

செல்வதும், கடுந்தண்டனை தரப்பட்டால் கலங்காது ஏற்றுக் கொள்வதும் அவர்கள் செலுத்த வேண்டிய காணிக்கை. குறிக்கோளைப் பெரிதெனக் கொண்டவர் கள்—அந்தக் குறிக்கோளை நாடு ஏற்றுச் செயல்படுவது எப்போது என்பதில் நாட்டம் கொண்டவர்கள்மீது சட்டமாகட்டும், அவசரச் சட்டமாகட்டும் வீசப்பட்டால் விசாரப்படவா செய்வர்? "சட்டம்—வழக்குமன்றம் தன் கடமையைச் செய்கிறது; நாம் நமது கடமையைச் செய் வோம்" என்றே இருப்பர். ஆனால் சட்டத்தை சமூகம் விசாரித்துக்கொண்டுதானிருக்கிறது!— சுவையுள்ள — பயனுள்ள—சிறப்புமிக்க வரலாற்றில் இடம்பெறத்தக்க விசாரணையை சமூகம் நடத்திக்கொண்டிருக்கிறது—சட் டத்தைக் கூண்டில் நிறுத்தி!!"

**17—7—60, "திராவிடநாடு"**




# அறப்போரின் இலக்கணம்

(4)

" அறப்போருள்ளத்துக்கு துணிவு வேண்டும்; தூய்மை வேண்டும்; தன்னல மறுப்பு மிக மிகத் தேவை. இதுதான் அறப்போரின் இலக்கணம். தாக்குவது எளிது; தாங்கிக் கொள்வது கடினம். எனினும் சீரியதோர் பணி



யினில்தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் அறப்போர் உள்ளம் பெற்றாக வேண்டும். அறப் போரின் முதற்கட்டம் அவரவரும் தத்தமக் குள்ளாகவே, எழும் எண்ணங்களுடன்— எழுச்சிகளுடன்—கோபாதாபங்களுடன்-ஆசா பாசங்களுடன் போரிட்டு வெற்றி காண்பதாகும். அந்த வெற்றி அளித்திடும் அளவிடற்கரியஆற்றல் விளக் கிடக்கூட இயலாது; உணரத்தான் முடியும். மிக மிக நீண்டகாலம் பூமிக்கடியில் புதையுண்டுக் கிடக்கும் கரித்துண்டுதானே ஒளிவிடும் 'வைரம்' ஆகிறது என் கின்றனர்......?"



7—3—61, " அறப்போர் "

# விடுதலை இயக்கம்...!

(5)

"விடுதலை ஆர்வம்—எழுச்சி எந்தத் தனிமனிதனுடைய ஆற்றலை மட்டுமே நம்பி அமைவதில்லை. அப்படித் தமக்கு ஒரு தனி ஆற்றல் இருப்பதாக எவரேனும் நம்பத் தொடங்கினால், இருக்கும் ஆற்றலும் கெட்டு வருகிறது என்றுதான் பொருள்படும். விடுதலை இயக்கம் எப்படி மாயம்—மந்திரத்தாலே நடைபெறுவது இல்லையோ, அதுபோன்றேஎந்தஒரு தனிப்பட்டவருடைய அதிசயிக்கத்தக்கத் திறமையால் மட்டுமே அதுநடைபெறுவதும் இல்லை. கடல்நீரில் எப்படி உப்புத்தன்மை ஒரு சேரக் கலந்து காணப்படுகிறதோ, காற்றிலே எங்ஙனம் இயங்கவைத்திடும் ஆற்றல் ஒருசேரக் கலந்து இருக்கிறதோ அஃதே போல் விடுதலை இயக்கம். அதிலே தங்களை ஒப்படைத்து விட்டுள்ள அனைவருடைய கூட்டுச் சக்தி பரவி ஒன்றாகிக்கலந்துபோயுள்ளநிலை பெற்றுவிடுகிறது."



28—5—61, "திராவிடநாடு"

# மனிதனின் ஓர் எண்ணம்!

(6)

"நாமின்றி என்ன செய்ய இயலும் என்ற ஓர் எண்ணம், நம்மால்தான் எல்லாம் என்ற எண்ணத்திலிருந்து பிறக்கிறது. பிறகோ, நாமில்லாதபோது



எதுதான் இயங்கும் என்று தோன்றும். பிறகு நாமின்றியும் ஒன்று இயங்குவதா, அதை நாம் விட்டு வைப்பதா என்று தோன்றும். பிறகு இயங்குவதை ஒழித்தாக வேண்டும் என்ற அரிப்பு ஏற்படும்; அது இயலாது என்ற ஐயப்பாடு குறுக்கிடும்; குறுக்கிட்டதும் நாம் மட்டும் போதாது, ஒத்தகருத்துடைய மற்றவர்களின் துணையை நாடவேண்டுமென்று எண்ணம் பிறக்கும். அது வளர்ந்திடின் வேறோர் மொத்தம் (கூட்டமைப்பு) ஏற்படும். ஏற்பட்டதும் அந்த மொத்தத்தில் நம் நிலைஎன்ன; பங்கு என்ன; என்ற எண்ணம் எழும். எழுந்ததும் பழைய கதையே தான்; நம்மால்—நம்மாலேதான்—நம்மால் மட்டும்தான்—நாமின்றி என்ன ஆகும்—நாம் நாமாகி விடுவோம்—என்ற இந்தக் கட்டங்கள் வடிவமெடுக்கும்."

**28—5—61, "திராவிட நாடு"**

# "இந்தியாவில் இந்தியரைக் காணவில்லை"

(7)

"இந்தியாவுக்குச் சென்றேன்; அங்கு இந்தியரைக் காணவில்லை"—என்று பீவர்லி நிக்கலாஸ் என்ற நூலாசிரியர் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதினார். உடனே அந்த ஆங்கில நாட்டுக்காரரை தேசியத் தலைவர்கள்



'பிய்த்து' எடுத்து விட்டார்கள். "ஏ! அறிவிலி! ஏடு எழுத வந்து விட்டாயா ஏடு! பேனா பிடிக்கத் தெரிந்தால் பேரறிவாளனாகி விடுகிறாயோ! உனக்கு என்ன தெரியும் எங்கள் நாட்டைப் பற்றி....? ஏடு எழுத வந்துவிட்டாயே ஏடு! எழுதுவது தானே குடித்துப் புரளுவோர்கள், கண்டவனுடன் குலவுபவர்கள், உன் நாட்டில் உள்ளனரே! அவர்களைப் பற்றி எல்லாம்..." என்று தாக்கினார்கள்; புத்தகத்தின் மீது கணை தொடுக்கப்பட்டது; "இந்தியா சென்றேன் இந்தியரைக் காணவில்லை" என்று எழுதிய பீவர்லி நிக்கலாஸ் படாத பாடு படவேண்டியதாயிற்று—இங்கு உள்ள பாரத புத்திரர்களின் தாக்குதலால். அந்த ஆங்கில நாட்டுக்காரர் கூறியதில் உண்மை இல்லையா...?"

**28—5—61, "திராவிட நாடு"**

# விடுதலைக்கு விலையே இல்லை !

(8)

"ஒரு நாடு விடுதலை பெற்ற நாடாக இருப்பதும், ஒரு மனிதன் சுதந்தர மனிதனாக வாழ்வதும் அதனால் ஏற்படக் கூடிய லாப நட்டக் கணக்கல்ல—நாம் பார்க்க வேண்டியது 'எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ்நாள் முழுவதும் சிறைக் கைதியாக இருப்பாயா?' என்று ஒருவனைக் கேட்டால், கூலிக்காரனாக இருந்தாலும் சுதந்தரமனிதனாகவே இருக்க விரும்புவான் என்பது மறுக்க முடியாததாகும். அதைப் போலத்தான் ஒரு நாடும் அடிமையாக இருப்பதால் லாபமா என்பதல்ல நாம் கவனிக்க வேண்டியது. ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா என்று யாரும் கேட்க மாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்தரத்திற்கும் விலையில்லை."



18—6—61, "திராவிட நாடு"

# எனக்கிருப்பது ஒரே ஒருகவலைதான்!

(9)

"நான் மிகமிகச் சாதாரண குடும்பத்திலே பிறந்தவன். ஒரு அரசியல் கட்சியை நடத்துகிற அறிவாற்றல் உங்களால் தான் நான் பெற்றேன். என்னுடைய குலத்தின் பெருமையாலும், பணத்தின் அருமையாலும் நான் தலைவனாகவில்லை; இன்று



என்னை இந்த இருக்கையில் அமர்த்தி நான் என்ன சொல்கிறேன் என்பதை அறிய இருக்கும் லட்சக்கணக்கான தம்பிமார்களுக்கும்—தங்கைமார்களுக்கும்—நான் என்ன கூறிவிடப் போகிறேன்!! எனக்கிருக்கிற கவலையெல்லாம்—நீங்கள் என்னிடத்தில் காட்டுகிற மரியாதைக்கும், வைத்திருக்கிற நம்பிக்கைக்கும், அன்புக்கும் ஈடாக நான் உழைக்கவேண்டுமே, அதற்கேற்ற உடல்வளம் எனக்கிருக்குமா என்ற ஒரே கவலைதான்! அதைத் தவிர உற்சாகத்தைப் பற்றியோ—உறுதியைப் பற்றியோ அச்சம் எனக்கில்லை"

—ஜூலை 1961-ல் மாநில தி. மு. க. சார்பில் நடைபெற்ற மதுரை—"திருப்பரங்குன்றம் மாநாட்டில்"

# நாடும்—மக்களும்

## (10)

"விடுதலை பெற்றோம் விழி பெற்றோம் என்றார் ஓர் பேரறிஞர்! ஒரு நாட்டின் எழில், ஏற்றம், வளம், வாழ்வு யாவும் வேறு நாட்டானிடம் சிக்கிக் கிடக்கும்போது மங்கிப் போகிறது. நமது நாடு ஏழை நாடு, வளமற்றது, வாழ வைக்கும் வல்லமை பெற்றது அல்ல, என்று நாமே எண்ணும் விதமான புத்திதடுமாற்றத்தைக் கொடுத்து விடுகிறது — அடிமைத் தனம்! நாட்டிலே செல்வம் இருக்கும்; — நாட்டவர் கண்களுக்குத் தெரியாது. வயலில் வளம் இருக்கும்; —பெற்றிட வழி தெரியாது. நாட்டுக்குப் புகழ்மிக்க வரலாறு இருக்கும்;—



படித்திடவாய்ப்பு இருக்காது! கண்ணுக்கு ஒன்றே ஒன்றுதான்தெரியும்! நம்மை நாமே ஆண்டுகொள்ள முடியாதவர்கள்,—நம்மை ஆள நம்மைவிட வலிவு மிக்கவர்கள், அறிவு மிக்கவர்கள், அனுபவமிக்கவர்கள், வந்திருக்கிறார்கள். எப்படி ஆள்வது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆளும் பொறுப்பை நாம் அவர்

களிடம் விட்டுவிட்டு ஆடுமாடுகளை மேய்த்திடலாம், காடுமேடு திருத்திடலாம், கைகட்டிப் பிழைத்திடலாம், கடை கண்ணி வைத்திடலாம்; கால் வயிற்றுக்குக் கிடைத்தாலும் கந்தா! முருகா! என்று பஜனை செய்தபடி இருந்து மாயாபந்தம் விடுபட்டு மகேசன்அடி சேர்ந்து விடலாம். அதுவரையில் இந்தக் 'கட்டை' நடமாடும் இடம் இந்த உலகம்—நாடு—வீடு!—என்று வேதாந்தம் பேசிடுவர் மக்கள் இருக்கும் காலை! அவர்கட்கு விழி இல்லை—நாட்டைக்காண, நல்வழிகாண! அதனால் தான் பேரறிவாளர் சொன்னார் "விடுதலை பெற்றோம் விழி பெற்றோம்" என்று....

**—20—8—61 "திராவிட நாடு"**



# கனவு கனவாகவே போய்விடாது

(11)

"மதலைகள் குதலை பேசி, மாமனை மாடு ஆக்கி மனைகளில் ஆடிப்பாடி, பின்னர் மங்கையராக மணவாளர் தம்மைக் கொண்டு, மலர்ந்திடும் முல்லைதானும் மணம்



பரப்பிடுதல்போல இல்லறம் தன்னில் நறுமணம் கமழ வாழ்ந்திடும் நிலையைக் கண்டாள் (ஒரு பெண்); தன்மகவு படுத்துறங்கும், தொட்டிலின் பக்கம் கீழே படுத்துறங்கும் போதினிலே கண்ட காட்சியால் கொண்ட எண்ணங்கள் கனவெனும் உருவம் தன்னில் உறவாடக் காணுகின்ருள்; வியப்பென்ன விஞக்கள் ஏன்? அன்னைக்கு உண்டன்ருே, ஆசைமகவு என்னென்ன விதமான ஏற்றம்பெறவேண்டுமென்ற நெஞ்சைத் தித்திக்க வைக்கும் நினைப்புகள் பற்பலவும். கனவென்று அதனைத் தள்ளிக் கருத்தறியாது போயின்—கனி மீது தோல் கண்டு சுவை ஏது என்றெண்ணிச் சுவைகாணும் வாய்ப் பிழக்கும் போக்கினர் போலாவர். 'அன்னை காணும்

கனவு' தன் மகவுக்கான எதிர்காலம் எங்ஙனம் இருக்க வேண்டுமென்று திட்டமிடுவதின் விளைவு! கனவு கனவாகவே இருந்துவிடும் என்றெண்ணும் போக்கினர் பேதையர்! பேரறிவாளர் கண்ட கனவெல்லாம் நனவாகி மாநிலத்தவர்க்கு இன்று மகிழ்வளிக்கக் காண்கின்றோம். எண்ணெய்த்திரியிட்டு ஏற்றி வைத்த விளக்கிருக்க— இந்த விளக்கைவிட ஒளி மிகுந்த நிலைபெற்று எண்ணெய்த்திரியுமின்றி எரியாதோ ஓர் விளக்கு என்றெண்ணிக் கிடந்தவனை இளித்தவாயன் என்றனர்! ஏனிந்தக் கனவு என்றனர்!! ஆயினும் அதுபோன்ற கனவுகளால் அகிலம்பெற்ற பேறு அளவிட்டுக் கூறப் போமோ!"

—3—9—61 "திராவிட நாடு"



# சிந்தனையும்—செயலும் !

## (12)

"பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் உடற்கூறு பற்றிய நுண்ணறிவு மிக்கவர். ஒருநாள், மாணவர்கட்கு தவளையின் உடற்கூறு எவ்விதம் உளது என்பது பற்றிய பாடம் நடத்த எண்ணிப் பெரிய தவளை ஒன்றினை



காகிதத்தில் சுற்றித் தம்சட்டைப் பையில் திணித்துக் கொண்டார். உணவு உட்கொள்ளக்கூட நேரமில்லை; போகிற வழியிலேயே தின்று கொள்ளலாம் என்று ரொட்டித் துண்டு ஒன்றினை வேறோர் காகிதத்தில் வைத்து எடுத்துக் கொண்டார் — வழி நடந்தார். தவளையின் உடலைக் கீறிக்காட்டி அமைப்பு உள்ள விதம்பற்றி விளக்கம் அளித்து மாணவர்க்கு நல்லறிவு புகட்டவேண்டுமென்ற எண்ணமே மேலிட்டிருந்தது. அந்த எண்ணம் அவரை ஆட்கொண்டு விட்டது. வகுப்பறை சென்றார். மாணவர்களை அழைத்து "மாணவர்களே! இன்று தவளையின் உடற்கூறு பற்றிய பாடம்! தவளையின் உடல் அமைப்பு எப்படி இருக்கிறது என்பதைக் காட்ட இதோ ஒரு தவளை கொண்டுவந்திருக்கிறேன்." என்று கூறியபடி பொட்டலத்தை எடுத்து மேஜை மீது வைத்துப் பிரித்தார்; ரொட்டித் துண்டு

இருந்தது! திகைத்தார். சட்டையின் மற்றப் பையைத் துழாவினுர்—ஏதும் இல்லை!! நன்ருக நினைவு இருக்கிறதே! தவளையைக் காகிதத்தில் சுற்றிச் சட்டைப் பையிலே வைத்த நினைவு தெளிவாக இருக்கிறதே. காணுேமே! என்று கூறித் திகைக்கிருர்.

தவளையைக் காகிதத்திலே சுற்றிச் சட்டைப் பையிலே வைத்த நினைவு பழுதுபடவில்லை; நினைவு சரியாகவே இருக்கிறது. அந்த நினைவு மட்டுமே அவரிடம்! தவளையை இப்படி இப்படிக் கீறிக் காட்ட வேண்டும்; அதன் உடலமைப்புப் பற்றி இன்னின்ன விளக்கம் அளிக்க வேண்டும் என்ற எண்ணமே அவர் மனதில்; வேறு நினைவே இல்லை! என்ன செய்கிறேம் என்ற நினைவுகூட இல்லை அவ்வளவு இரண்டறக் கலந்து விட்டார்; தவளை பற்றிய பாடத்தை மாணவர்க்குக் கூறவேண்டும் என்ற நினைப்பில்!—அதனுல் வருகிற வழியில் என்ன செய்கிறேம் என்ற நினைவு கொள்ளாமல் பொட்டலத்தைப் பிரித்து, ரொட்டித் துண்டு என்று எண்ணிக் கொண்டு, பாவம்—தவளையையே மென்று தின்று விட்டார்!! நல்லவர்! எனினும் இப்பேராசிரியர் ஏதோ ஒரு நினைப்புக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்து விட்டு கவனிக்கப்பட வேண்டிய, வேறு விஷயங்களைப் பற்றிய நினைப்பே இல்லாது போனுர்;— இந்த விபரீதம் ஏற்பட்டது.''

—10—9—61 "திராவிட நாடு"

# பொதுப்பணியாற்றிடு வோருக்கு...!

(13)

"வழக்கப்படி நண்பருடன் சாக்ரடீஸ் வீட்டு வாயிற்படி அருகே நின்று பேசிக் கொண்டிருந்தார் ;— பல பொருள் பற்றி, ஆழ்ந்த கருத்துக்களை எளிய, இனிய முறையிலே விளக்கியபடி அவர் பேச்சைக் கேட்டு



நண்பர் சொக்கிப் போனார். உள்ளே ஒரே கூச்சல் ; குளறல், அலறல்! சாக்ரடீசின் மனைவி, இப்படி வேலை வெட்டி இல்லாமல் பொழுதை ஓட்டிக் கொண்டு, கண்டவனிடம் கண்டதைப் பேசிக் கொண்டு கிடக்கிறாரே; செ! இவரும் ஒரு மனிதரா! —இவரைக் கட்டித் தொலைத்தார்களே என் தலையில் என்றெல்லாம் அர்ச்சனை செய்கிறாள்—உள்ளே இருந்தபடி உரத்த குரலில். நண்பன் இது கேட்டுத் திகைக்கிறான் சாக்ரடீசுக்கும் பேச்சு காதில் விழுகிறது; நண்பன் திகைப்பும் புரிகிறது—ஆனால் ஒரு துளியும் பரபரப்பு அடையவில்லை; கோபம் எழவில்லை ; பேச்சின் போக்குக்கூட மாறவில்லை ; மனைவியின் தூற்றலைப் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டே இருக்கிறார்.

உரத்த குரலில்—இடி இடிப்பது போல...

எவ்வளவு திட்டினாலும் பொருட்படுத்த வில்லையே என்ற ஆத்திரம்; அம்மைக்கு.

குடம் நிறையத் தண்ணீர் எடுத்து, உள்ளே இருந்து சரேளென வெளியே வந்து சாக்ரடீசின் தலையிலே கொட்டிவிட்டுச் சென்றாள்—தன் ஆத்திரத்தைக் காட்ட.

நண்பன் திடுக்கிட்டுப் போனான்; அப்போதுதான் சாக்ரடீஸ் சொன்னார், "இவ்வளவு நேரம் இடி இடித்தது; இப்போது மழை பெய்கிறது" என்று.

சாக்ரடீசுக்கு வந்து வாய்த்தவள் அப்படி. அதற்காக அவர் தமது அறிவுப் பிரசாரப் பணியை நிறுத்தி விட்டு அம்மையை நல்வழிப் படுத்தும் காரியத்தைக் கவனித்து விட்டுப் பிறகு மற்ற காரியம் என்று இருந்து விட்டாரா? அல்லது நாடே கொண்டாடும் நிலை நமக்கு; நம்மை இவ்விதமாக நடத்துபவளை யைப் புடைத்துவிட வேண்டாமா என்று கோபப்பட்டாரா? இல்லை! "நம்மிடம் உலகு எதிர்பார்ப்பது அறிவுப் பணி. அதனை நடத்திச் செல்வோம்" என்று இருந்து வந்தார். பொதுப்பணி யாற்றிடுவோருக்கு இந்த மனப்பக்குவம் ஏற்பட வேண்டும்."

**3—6—62, "திராவிட நாடு"**



# கேடு களைவதெப்படி...?

(14)

"மலர் தரும் செடி கொடிகளும், கனி தரும் மரங்களும் கொண்டதாகவே தோட்டங்கள் இருத்தல் வேண்டும்.—பூங்காக்கள் கொண்டதாகவே புவி இருக்க வேண்டும் என்று விரும்புவதும் கூறுவதும் தவறு அல்ல.—



அந்த நிலைக்காக பாடுபடுவது தேவையானதுங்கூட! ஆனால் மலர்த்தோட்டத்துக்குப் பக்கத்திலே கள்ளிக்காளான் முளைத்துவிடுகிறது. பக்கத்திலா? தோட்டத்திலேயே கூட!! என் செய்யலாம்? கனி குலுங்கும் மரத்தைக் கருமந்தி பிடித்தாட்டுகிறது. கடுங்காற்று கிளம்பி மரங்களையே பெயர்த்தெடுத்து விடுகிறது!! என் செய்வது? கேடுகள்முளைக்கும்போது அவற்றினை எதிர்த்து வீழ்த்தி நல்லனவற்றைப் பாதுகாத்துத் தீரவேண்டும். அது மட்டும் போதாது—கேடுகள் மீண்டும் எழாதபடி பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும். இது தேவையானதுதான்.—இதனை வற்புறுத்த, விளக்கம் அளிக்க, இதற்கு ஆதரவு திரட்டிடத் தேவையா?—எவரும் இசைவரே என்று கூறத் தோன்றுகிறது. ஆனால் இதிலே உள்ள சிக்கல் யாதெனில் களைந்தெறியப்பட வேண்டிய கேடு எது—என்ன இலக்கணம் கண்டு ஒன்றினைக் கேடு என்று கொள்ள முடிகிறது என்பதுதான்......!

—15—1—63 "திராவிடநாடு"

# வீரமும்—வெறியும்

## (15)

"நீதிக்காக, நேர்மைக்காக, உரிமைக் காத்திட அநீதியை அழித்திடக் கிளம்பும் படை வீரதீரத்துடனும், தியாக உணர்வுடனும், தாளின் கீழ் வீழ்ந்து தாசராவதைக் காட்டிலும், மண்ணிலே மாற்றான் வாளால் வெட்



டுண்டு நம் தலை உருளட்டும்; கழுகு—உடலைக் கொத்தித் தின்னட்டும்; செத்துத் தொலைந்தான் சீறிப் போரிட்டவன் என்று கூறிக் கேலி பேசட்டும்; 'தாக்க முனைந்தோம் தாள்தொழுதான்,—உயிர்ப் பிச்சை தாரும்; உமக்கு நான் எதையும் உடைமையாக்குகிறேன் என்று கெஞ்சினன்' என்று எதிரி பேசும் பேச்சைவிட சாவு கொடுமை உள்ளது அல்ல; என்ற உணர்ச்சியுடன் போரிடும் படை மண்ணுக்காக அல்ல. மானங்காத்திட மாண்பு நிலைத்திடப் போரிடும் படை—என்றும் நிலைத்த புகழ்பெறுகிறது. பாவாணர்களின் புகழாரம் சூட்டப்பட்டு பலப்பல தலைமுறைகளுக்குப் பின்பும் வீடுதோறும், வீடு தோறும் பேசப்படும் கதை

களுக்கும், பாடப்படும் கவிதைகளுக்கும் உருப்பொருளா கிறது. படைகளைக் கொன்று குவித்து, மண்டலங்களை மண்மேடுகளாக்கி, மணிமுடிகளை காலால் உதைத்து விளையாடி, அடிமைகொண்டு எஞ்சியோரைச் சித்திரவதை செய்து, இவை போன்ற நெஞ்சம்உருக்கும் நிலைமை களைக் கண்டு கைகொட்டிச் சிரித்திடும் போக்கு, வீரம் அல்ல—வெறி!

**14—1—63 "திராவிடநாடு"**



# எண்ணம் ஒரு கழனி

## (16)

"எண்ணமெனும் கழனியில் எத்தனையோ விளைகின்றன! அவற்றின் பயன் யாவும் கண்டறிந்து எடுத்துச் சுவைபெறல் அறிவுடைமை!


கருத்துக்கள் பல மலர்வது—பல—பண்டங்களை இயற்கை தருவது போன்றதாகும். அவை வெவ்வேறு முறைகள் கொண்டனவாய் இருப்பினும் முடிவில் ஒரு பயனையே பெறுகின்றோம். அந்தப் பயன்பெறும் முறையிலேதான் செம்மை தேவை;—படைப்பின் முறையில் அல்ல!"

**14—1—63 "திராவிடநாடு"**

# நெல்லும்—மனிதனும்

## (17)

"நெல்! எல்லாமே நெல்தான் எனினும் ஒவ்வோர் வகைக்கும் ஒவ்வோர் காலம் தேவைப்படுகிறது. குறுவைக்குப் போதுமான நாட்கள் கிச்சிலிச் சம்பாவுக்குக் காணுது! ஒருவகை நெற்பயிர் நீந்தியபடி இருக்க விரும்புகிறது! வேறு சில வகைக்கு நீர் தெளித்துவிட்டால் போதும் — திருப்தியடைந்து விடுகிறது. சிலவகை ஏற்றுக் கொள்ளும் உரத்தை வேறுசில வகையான நெற்பயிர் ஏற்றுக்கொள்வதில்லை. நாம் நெடுங்காலமாக இவருக்கு எந்தப் பண்டம் பிடிக்கும், அவருக்கு என்ன பானம் தேவை என்பது பற்றியே பேசி வருகிறோம். நம்மை வாழவைக்கும் 'படைப்பு'களான இப்பயிர் வகைகளின் விருப்பு, வெறுப்புப் பற்றி அறிய முனைந்தோமில்லை. ஏன்? வயலருகே சென்றவர்கள் நம்மில் அநேகர் அல்ல! செல்லும் சிலரும் 'அறுவடை' காணச் செல்லும் ஆர்வத்தை மற்றபோது காட்டுவதும் இல்லை"



**14—1—63 "திராவிட நாடு"**

# இயற்கை எனும் பல்கலைக் கழகத்தில் நாம்...!

## (18)


"ஒவ்வோர் விளைபொருளும் ஒவ்வோர் வாழ்க்கை முறை கொண்டுள்ளது அறிந்து கொள்ளும் முயற்சி சுவையாயிருக்கும். ஆனால் நாமோ அவைகளினால்



கிடைக்கும் பயனைப் பெறவும், அதற்கான பக்குவம் காணவும் முயற்சிக்கிறோம்; அதற்காக துணிந்து எதனையும் செய்கிறோம்.—நாம் பிழைக்க ! எத்துணை உயரத்தில் எவ்வளவு பாதுகாப்பு அமைத்துக்கொண்டு தென்னை — இளநீர்க் காயைக் கொண்டுள்ளது! விடுகிறோமா ? நம்மாலே முடியாது போயினும் பிறரைக்கொண்டேனும் பறித்துவரச்செய்து மேலே உள்ளதைச் சீவி எடுத்துவிட்டு அதற்கு அடுத்துள்ளதை உரித்து எடுத்துவிட்டு அதற்கும் பிறகு உள்ள ஓட்டினை

உடைத்து, உள்ளே இருக்கும் இளநீரைப் பருகி இன்புறுகிறோம். மதில்சுவரின் மீதேறிச் சென்று உள்ளே நுழைந்து பெட்டியைக் களவாடி, அதன் பூட்டினை நீக்கித் திறந்து உள்ளே உள்ள பொருளைக் கண்டு களித்து எடுத்தேகும் திருடனைப் பற்றி நாம் என்ன எண்ணுகிறோமோ அதுபோலத்தான் நம்மைப் பற்றித் தென்னை எண்ணுகிறதோ என்னவோ! இதுபோன்று இயற்கைப் படைப்புகளிலே சில பிஞ்சிலே மட்டும் சுவை தரும்; சில கனிந்த பிறகே பயன் அளிக்கும்; சிலவற்றை உதிர்த்தெடுக்க வேண்டும். சிலவற்றைப் பறித்தெடுக்க வேண்டும்; ஒவ்வொன்றுக்கென அமைந்திருக்கும் வெவ்வேறு முறைகள் பற்றி அறிந்திடும்போதுதான் இயற்கை எனும் பல்கலைக்கழகத்திலே நாம் கற்றுணர வேண்டிய பாடங்கள் பல உள;—கற்றோம் இல்லை என்ற தெளிவு பிறக்கும்.''

—14—1—63 "திராவிடநாடு"



# தமிழகத்தின் சிறப்பு

(19)

" இலக்கியமே சான்றளிக்கக் காண்கிறோம். எழுத்தறிவே பலநாடு பெற்றிராத காலத்தே தமிழில் உதித்தெழுந்த மொழிகளால் வெவ்வேறான ஆந்திரமும், கேரளமும், கர்நாடகமும் அழகுதமிழகமாக இருந்த கலை இலக்கியச் சிறப்பினை ஓர் அணியாய்க் கொண்டு திகழ்ந்திருந்ததென்றால் பொருள் என்ன வாழ்க்கையிலே வளம் நிரம்பி மக்கள் மனவளமும் நிரம்பப் பெற்று இருந்தார். அங்கு புலவர்குழாம் அரசோச்சி அரசர்க்கெல்லாம் அறவழியைக் காட்டித் துணை நின்றதெனும் உண்மையன்றோ விளங்குகின்றது. எனவே திட்டமிட்டுச் செயலாற்றி, இயற்கை வளத்தினையே தக்கபடி பயன்படுத்திடுவோமேல், செல்வம் வளரும் என்பதும், அதற்கேற்ற கருப்பொருள் உண்டு இங்கு நிரம்ப என்பதும் புலப்படுகிறதன்றோ! வளரும் செல்வம் ஏதோ ஓரிடம் சென்று முடங்கிக் கொண்டுவிடாமல் இருக்க, துணிவும் தெளிவும், விரைவும், அறிவும் கொண்ட முறையில் பணியாற்றிடுநல் அரசுமுறை வேண்டும்"



—14—1—63 " திராவிடநாடு "

# மக்களாட்சி முறை !

(20)

"தூய்மை நிறைந்த மக்களாட்சி முறை, தேவைப் படும்போது பொதுநோக்கத்துக்குத்தான் கட்டுப்படுமே



யன்றி கட்சிக் கொடிகளுக்கு அன்று! "அங்ஙனமாயின் கட்சிகள் பலப்பல ஏன்? தனித்தனிக் கொடிகள் ஏன்?" என்று கேட்கப்படுகிறது இது எரிகிற வீட்டி லிருந்து எடுத்தவரை இலாபம் என்ற போக்கே யன்றி வேறில்லை. ஒரு பொது நோக்கத்துக்காகப் பாடுபடும் மாண்பு மக்களாட்சிக்கு உண்டு என்பதாலேயே எல்லாவற்றை யுமே கூட்டிக் கலக்கி ஒருருவாக்கி, பேருருவாக்கிவிட எண்ணுவது பேதைமை மட்டுமல்ல; கேடு விளைவிக்கக் கூடியதே. மலர்களை உதிர்த்து இதழ்கள் குவித்திடலாம்; இதழ்களைக் குவித்து புதிய பூக்களை மலரச் செய்திட முடி யாது! மலர்களைத் தொடுத்து, மாலைகளாக்கலாம்— செடிகள் மாலை மாலையாகவே ஏன் தந்துவிடக்கூடாது என்று எண்ணுவது வேடிக்கை நினைப்பன்றி வேறில்லை! தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டச் சொன்னார் சான்றோர்; தனித்தனி கனிகளே கூடாது என்றாரில்லை."

—14—1—63 "திராவிட நாடு"

# ஒரு கருத்து !

## (21)

"சந்தனமரம் பயிரிட்டு வளர்க்கப்படுவதல்ல, காட்டிடை சவிதை விளங்கிடும் மணம்தரு சந்தனமரங்களிலிருந்து உதிர்ந்திடும் விதைகளைப் பறவைகள் ஏந்திச் சென்று தூவிடும் இடங்கள் தன்னில் செடிகள் முளைத்து, செழுமையாய் வளர்ந்து புலவோர் பாடி மகிழ்ந்திடும் 'தென்றல் எனும் பெண்ணாள்' பெற்றிட மணமளிக்கும் சந்தனமரமாகிறது. அஃதே போன்றே, ஏற்புடையதாக மட்டுமல்ல, உயிர்ப்புச் சக்தியுள்ளதாகவும் ஓர் கருத்து இருக்குமானால், அக்கருத்துக்காக ஆயிரம்



அமைப்புகள் ஏற்பட்டுவிடும் : அழிக்கப்பட்டது போக மற்றது கருத்தைத் தாங்கி நிற்கும்; எல்லாம் அழிந்து போயினும்கூட எங்கோஓரிடத்தில் ஏதோ ஓர் பறவை, எப்போதோ தூவிய விதை முளைவிட்டுச் செடியாகி நிற்கும்"

**—14—1—63 "திராவிடநாடு"**

# ஆட்சி புரிவோர் கவனத்திற்கு... !

(22)

"கொற்றம் ஆள்பவர்கள் இன்னொருவர்—பிறகொருவர் என்று நிலைபிறக்கும் நெறியதுதான் குடியாட்சி. கொற்றம் நடாத்துபவர், ஒவ்வோர்கொடிக்குடையோர் நாடறியும். எந்தக் கொடியுடையார் கொற்றம் நடத்திவர உரிமை பெற்றனரோ அவர் ஆணைவழி நடக்கும் அரசு;—எனினும் அக்கொடியுடையார் கொடியோராஞல், மக்கள் தமக்காக வாதாட, மமதை கொண்டோர் மண் கவ்வ, கொற்றம்



மக்கள் உயிர்குடிக்கும் கொடுமையாகி விடாமல் தடுத்து நிறுத்திவிடவே மற்றக் கட்சியினர் விழிப்புடனே இருந்திடுவர். ஒரு கொடிக்கு உடையார்கள் உயர்வதுண்டு தாழ்வதுண்டு; அவரிடம் போய் 'கொற்றம்' இருந்திடினும் அதன் வலிவு மிகப்பெரிது! ஆஞல் கொற்றம்தனைவிடவே நாடு மிகப்பெரிது. நாட்டுக்கே ஆபத்து என்ற நிலை வெடித்ததுமே கொற்றத்தின் எதிர்காலம் என்னவெனப் பேசுவதற்கோ, எவர் பெறுவர் அடுத்த முறை—கொற்றம் நடாத்திடும் ஓர் உரிமை எனப் பேசி வருதற்கோ நேரமிலை; நேர்மையல்ல அப்போக்கு!"

—14—1—63 "திராவிடநாடு"

# தமிழர்களின் போர்முழக்கம் கேளீர்!

## (23)

"வையகம் வாழ்ந்திட வழங்குவோம் எதனையும் என்று கூறிடுவர். தமிழர் நேசநோக்குக் கொண்டோர்க்கு பகை எனிலோ, உரிமை பறித்திட எவரேனும் கிளம்பிடினே, இழி மொழி புகன்றிட எவரேனும் துணிகுவரேல் முழக்கம் எழுப்புவர்!— "ஈட்டியார் சிரங்களை வீட்டிட எழுமின்! நீட்டிய வேல்களை நேரிருந்து எறிமின்! வாளுடை முனையினும் வயந்திகழ் சூலினும், ஆளுடைக் கால்கள் அடியினும், தேர்களின் உருளையினிடையினும், மாற்றவர் தலைகள் உருளையிற்கண்டு, நெஞ்சு உவப்புற வம்மின்!" —என்று அழைப்பு விடுப்பர்; அடலேறுகள் அணி திரண்டெழுவர்; போரிட, வாகை சூடிட!!



**—14—1—63 "திராவிடநாடு"**

# தமிழர்களின் வீரப்போர்க் கருவிகள்

## (24)

"தமிழர்கள் அந்த நாட்களிலேயே நால்வகைப் போர்ப் படைகளைக் கொண்டிருந்தது மட்டுமல்ல;— கடலரண், காட்டரண், மலையரண், மதிலரண் எனும் பாதுகாப்புக்களையும் பெற்றிருந்தனர். போர் முறைகளிலே யும் புதுக் கருத்துக்கள் கொண்டதனால் அற்றை நாளில் தமிழர் பெற்ற வெற்றி கள் இன்றும் எண்ணிவியக்கத் தக்கன வாக உள்ளன. நெடுந்தொலைவு படை யுடன் சென்று போரிட்டு வெற்றி பெற்ற



வீரக் காதைகள் பலப்பல. போரிலே வெற்றி காண வீரம் அடிப்படைஎன்பது மறுக்கொணாத உண்மை என்றாலும் போர்க் கருவிகளின் தன்மையும் மிக முக்கியமானது என் பதை ஆய்ந்தறிந்து உணர்ந்திருந்ததால் பிற நாட்டாரிடம் இல்லாத பல்வேறு வகையான போர்க் கருவிகளைக் கொண்டிருந்தனர். வளைவிற்பொறி—தள்ளிவெட்டி— கருவிரலூகம்—களிற்றுப்பொறி—கல்லுமிழ்கவண்— விழுங்கும் பாம்பு—கல்லிடுகூடை-கழுகுப்பொறி—இடங் கணி—புலிப்பொறி—தூண்டில்—குடப் பாம்பு—

ஆண்டலையடுப்பு—சகடப் பொறி—கவை—தகர்ப்பொறி—கழு—அரிநூற்பொறி—புதை—குருவித்தலை—ஐயவித்துலாம்—பிண்டிபாலம்—கைப்பெயர் ஊசி—தோமரம்—எரிசிரல்—நாராசம்—பன்றி—சுழல் படை—பணை—சிறுசவளம்—எழு—பெருஞ்சவளம்—மழு—தாமணி—சீப்பு—முசுண்டி—கணையம்—முசலம்—சதக்களி.—தம்பி! இத்தனை விதமான புதுமுறைப் போர்க் கருவிகள் இருந்தன. இத்துடன் தமிழரிடம் தனியாக வீரர் தழுதாற்றலை விளக்க போர்வாளும், கேடயமும். ஈட்டியும் உண்டு! தமிழரை எதிர்த்த மாற்றார்களிடமும், பிற நாட்டவரிடமும் வேல், வில், அம்பு, சிறுவாள், கொடுவாள், அரிவாள், ஈர்வாள், உடைவாள், கைவாள், கோடரி, ஈட்டி, குறுந்தடி, என்பன மட்டுமே இருந்தன. இன்று விஞ்ஞான அறிவுப் பெருக்கத்தின் காரணமாகக் கிடைக்கப் பெற்றுள்ள போர்க்கருவிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழரின் போர்க் கருவிகள் சாதாரணம்தான். ஆனால் அன்றையநிலையில் மற்ற நாட்டவர் போர்க் கருவிகளுடன் தமிழர்களின் போர்க் கருவிகளை ஒப்பிடும் போதுதான் தமிழரின் சிறப்பு விளங்கும்''

**14—1—63 "திராவிட நாடு"**



# கிளர்ச்சியும்—வெற்றியும் !

## (25)

"கிளர்ச்சிகள் பலவும், நெஞ்சத்து அடிவாரத்தில் ஆழப் பதிந்துள்ள அடிப்படைக் கொள்கைக்கு உடனடியான வெற்றியைத் தந்திடுவதில்லை—பெரும்பாலும். ஆனால் அவையாவும் நாட்டுமக்களை, கிளர்ச்சி நடத்துவோர் காட்டிடும் அடிப்படைக் கொள்கையிடம் ஈர்த்திடும் வெற்றியை—மறைமுக வெற்றியைப் பெற்றிருக்கிறது. மேய்ச்சல் வரி எதிர்ப்புக் கிளர்ச்சி, உப்புவரி ஒழிப்புக் கிளர்ச்சி, மேனாட்டுப் பொருள் ஒழிப்புக் கிளர்ச்சி, மது ஒழிப்புக் கிளர்ச்சி, ஒத்துழையாமைக் கிளர்ச்சி, ஆங்கிலப் படிப்பு அகற்றும் கிளர்ச்சி என்பன கிளர்ச்சிகள் நடத்தப்பட்டவர்களால் (காங்கிரசாரால்) நடத்தப்பட்ட நேரத்தில், உடனடி வெற்றி பெறும் என்று வாக்களிக்கப்பட்டதென்றாலும் கிடைத்தது உடனடி வெற்றியல்ல ; இத்தனை கிளர்ச்சிகளும், கிளர்ச்சி நடத்தி





யோர் கொண்டிருந்த அடிப்படை நோக்கத்துக்கு—நாட்டு விடுதலைக்கு வழிகோலின—மக்களை அதற்குத் தக்க பக்குவநிலை பெறச் செய்தன. ஆனால் எந்த ஒரு கிளர்ச்சிக்கான காரணத்துக்காகவும், தொடர்ந்து விடா மூச்சாக, இரண்டில் ஒன்று பார்த்திடுவது என்ற முறையில் கிளர்ச்சிகளை நடத்தினர் இல்லை. எடுத்துக் காட்டுக்குக் கூறுவதென்றால் அந்நியர் துணி எரிப்புக் கிளர்ச்சி, அந்நியத் துணி அறவே தடுக்கப்பட்டு விடும் வரையில் தொடர்ந்து நடந்துவரவில்லை. பிரச்னை வடிவிலேயும், கிளர்ச்சி வடிவிலேயும் தமிழ்ப் பெருங்குடி மக்களிடம் தொடர்ந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவும், விறுவிறுப்புடன் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவும் இருந்து வருவது தமிழ்மொழி பற்றிய பிரச்னையேயாகும்''

—14—1—63 "திராவிட நாடு"



# எச்செயலும் ஆக்கம்பெற...?

(26)

"வாளினை வடித்தெடுத்துக் கொடுத்திட உலைக் கூடத்தினுள் பணிபுரிவோன், இந்த வாள் வீரன் கரம் சேர்ந்து, அக்ரமத்தை வெட்டி வீழ்த்தப்பயன்படும்; உரிமை காத்திடத் துணை நிற்கும் என்ற நம்பிக்கையைப் பெற்றிடும் போதுதானே அவன் வேலைத் திறன் நேர்த்தி மிக்கதாகும்? சொல்லழகும், பொருளழகும் இழைந்துள்ள நற்கவிதை இயற்றிடுவோன், அந்தக் கவிதையினை சுவைத்திட, பயன் பெற்றிட இசைந்து வந்திடுவோர் உளர் என்ற உணர்வினைப் பெற்றாலொழிய



உள்ளத்திலிருந்து கவிதா சக்தி சுரந்திடுமா? எடுத்துக் கொள்ளும் எந்தச் செயலினையும் பாராட்டி வரவேற்றிடவும், ஏற்றுப் பயன்படுத்திக் கொள்ளவும் தக்கார் உளர் என்ற எண்ணம் மேற்கொள்ளும்செயலினைச் செம்மையான தாக்கிடுமல்லவா? தாயின் அன்பினைப் பெற்றிட வாய்ப்பற்ற குழந்தை எத்தனை அழகுடன் விளங்கியும் பயன் என்ன!"

—11—9—66 "காஞ்சி"

# அன்பின் வலிமை!


## (27)

"அன்பான இதயத்தோடு அணுகி, இதமாகப் பேசினால் யாரையும் திருத்த முடியும். மனிதர்களில் யாரும் பிறக்கும்போதே கெட்டவர்களாகப் பிறப்பதில்லை.



அவரவர் பழகுகின்ற சுற்றுச்சார்பு—சூழ்நிலை—உள்ளத்திலே ஏற்படுகின்ற எரிச்சல்—மனிதனை நல்லவனாகவோ, கெட்டவனாகவோ மாற்றுகின்றது. உள்ளம் கெடுகின்ற போது மனிதத் தன்மை குன்றி மிருகத்தன்மை எழுகின்றது. மனித உள்ளத்தில் மிருகத்தன்மை எழுகின்றபோது அதை அன்பால் தணிக்க முடியும். அந்த முயற்சியிலே மேல்நாடுகளில் நல்ல வெற்றிகளைக் கண்டிருக்கிறார்கள். காலவெள்ளம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது! நாம் செய்த வேலைகள் குறைவு! செய்ய வேண்டிய வேலைகள் அதிகம்!!"

—18—1—67ல் சென்னை, அசோக்விகார்
இயக்குநர் பாராட்டு விழாவில்......




# உயிர் எதற்கு ?

(28)

"நான் பலமுறை சொல்லியதையே திருப்பிச் சொல்லுகிறேன்.—உள்ள உயிர் ஒன்றுதான்! அது போகப்போவதும் ஒரு முறை தான்!! அது நல்ல காரியத்திற்காகப் போவதையே நான் விரும்புகிறேன்!!! வயதாகி, இருமி—ஈளைகட்டிச் சாக—எதிர்வீட்டாரும், பக்கத்து வீட்டாரும் 'இன்னுமா போகவில்லை உயிர்' என்று கேட்டுப் போக—அப்படிப்பட்ட நிலையில் சாக எங்களில் யாரும் தயாராக இல்லை."

—19—1—67ல் சென்னை, சைதை பாதுக்கூட்டத்தில்...



# தி. மு. கழகம் அழிக்கப்படுமே யானல்...?

## (29)

" திராவிடமுன்னேற்றக் கழகம் அழிக்கப்பட்டு விடுமேயானல் அதனாலே எங்களில் தனிப்பட்ட



யாருக்கும் நட்டமில்லை! ஜனநாயகத்துக்கு நட்டம்—மக்களாட்சிக்கு நட்டம்! விளக்கு அணைந்தால் திருடனுக்கு இலாபம்—வீட்டுக்காரருக்குத்தான் நட்டம்! நாங்கள் ஏற்றி வைத்த விளக்கு 16ஆண்டுகளுக்கு மேலாக எரிந்து கொண்டிருக்கிறது. நாட்டில் ஒரு கட்சி இருப்பது இன்னொரு கட்சியை ஒழிப்பதற்கு அல்ல! ஒரு கட்சி வேட்பாளரை இன்னொரு கட்சி வேட்பாளர் ஒழிப்பதற்கும் இல்லை. நாட்டு மக்கள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களுக்கு உருவமாக — இலட்சியங்களுக்கு வடிவமாக —போராட்டங்களுக்கு ஆயுதமாக நாங்கள் இருக்கிறோம்."

—22—1—67ல் சென்னை, மாம்பலம்
பொதுக் கூட்டத்தில்...

# நாட்டின் இலக்கணம்!

## (30)

"வெளிச்சம் மங்காமல், குறையாமல், அணையாமல் இருப்பது நல்ல விளக்கு. ஓட வேண்டிய அளவு, ஓட வேண்டிய நேரத்தில் நீர் ஓடுவதுதான் நல்ல ஆறு! மழைக் காலத்தில் ஒழுகாமலும், வெயில் காலத்தில் வியர்க்காமலும், காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ளவீடு நல்ல வீடு! வீட்டுக்கு உள்ள இலக்கணம் தான் நாட்டுக்கும்! 'நல்ல ஆட்சி என்றால் எப்படி இருக்க வேண்டும்'—நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ—அப்படித்தான் நல்ல ஆட்சியில் மக்களுக்கு நிம்மதி வேண்டும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் சொல்லியிருக்கிறார்—'பசி, பிணி, பகை இல்லாதிருப்பது நல்ல நாடு' என்று."




—22—1—67ல் சென்னை, மாம்பலம் பொதுக்கூட்டத்தில்...

# மதம் மனிதனின்?......

(31)

"சமயம் என்பது மனிதனின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அவனுக்கு அது சரியான பாதையைக் காட்டவேண்டும். மக்களில் ஒரு



பகுதியினரைத் தீண்டத் தகாதவர்களாய்க் கருதி சமூக ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கும் ஒரு மதத்தை யாரும் ஏற்க முடியாது. மென்மையாகவும், அழகாகவும் துவக்கத்தில் இருக்கும் மெத்தைத் தலையணைகள் தான் நாளடைவில் மென்மை குறைந்து, அவற்றின் இடுக்குகளில் தேள் குஞ்சுகளும் இருக்கும்; அப்போது படுக்கையை உதறிப்போடுவதுபோல் நாம், மதத்தில் படிந்துவிட்ட மாசுகளைப் போக்கவேண்டும். மதத்தில் உள்ள அழுக்குகளை அகற்றும் பணிக்கு என்னை நான் ஒப்படைத்து வருகின்றேன்."

**9—9—67 காரைக்குடி விழாவில்...**

# என் வாழ்வு எனக்காக அல்ல !

(32)

"என் பிறந்தநாளை தமிழகத்தில் விழாவாக நடத்தியது எனக்குப் பெருமையை அல்ல—பொறுப்புணர்ச்சியைத் தான் அதிக அளவு தந்துள்ளது. 'என் வாழ்வு எனக்காக அல்ல மக்களுக்காக' என்பதை நினைவுபடுத்துவதே அந்த விழா! 'என் வாழ்வு எனக்காக மட்டுமல்ல நாட்டுக்காக' என்ற கருத்தை நாட்டவர் போற்றுகின்றனர் என்பதற்கு, நேற்றைய விழா ஓர் எடுத்துக்காட்டு. பொது மக்களுக்கு இயன்ற அளவு பணியாற்றுவதை என் இயல்பாக ஆக்கிக் கொண்



டுள்ள எனக்கு, இத்தனை அளவுள்ள நல்லெண்ணத்தைத் தந்துதவியவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் உற்சாகத்துடனும், உறுதியுடனும், நம்பிக்கையுடனும் தொடர்ந்து பணியாற்றிவருவதே நான் அவர்களுக்கு நன்றிகூறிக்கொள்ளும் வழிஎனக் கொண்டுள்ளேன். எளியவனான எனக்கு மக்கள் தந்துவரும் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும், கனிவும் அளவிட முடியாத மதிப்புள்ள பெரிய செல்வமாக அமைந்திருக்கிறது. திட்டமிட்ட முன்னேற்றம்—கசப்புணர்ச்சி அற்ற சமூகவாழ்வு இவை என் குறிக்கோள் — பல ஆண்டுகளாக"

**6—9—67 பிறந்த நாள் விழா 'நன்றிச் செய்தி'யில்...**

## நாடும்—அழகும்

(33)

"தாய்லாந்து நாட்டுக்கு நான் போயிருந்தபோது—பாங்காக் நகரில் ஒரு நெடுஞ்சாலையின் நடுவே என்னை அழைத்துச்சென்று, 'இது ஒரு வியாபாரக் கோட்டம்' என்றார்கள். அப்போது மாலை 5 மணி இருக்கும். ஊர் நடுவே தண்ணீர் இல்லாத வாய்க்கால்—மணல் பரந்த வெறும் வாய்க்கால் வாயைப் பிளந்து கொண்டு கடலை நோக்கி அமைந்துக் கிடந்தது; மனிதர் யாருமே இல்லை; இதுவா வணிகக் கோட்டம்? என்றேன். 'இப்போது பார்த்தீர்கள் அல்லவா—நாளைக் காலையில்



பார்க்கலாம் இதே இடத்தை' என்றார்கள். மறுநாள் காலை நாங்கள் அங்கே சென்று பார்த்தோம். காலை 7மணி முதல்

10மணி வரை கடலில் இருந்து நீரைமணல் வெளியில் நிரப்புகிறார்கள்.—அப்போது அது ஆறு போல்க் காட்சி அளிக்கிறது; அலங்காரப் படகுகள் அதில் அசைந்தாடி வருகின்றன. அவையே பலவகைப் பண்டங்கள் விற்கும் அங்காடிகள் ! பண்டங்களை வாங்க சிறுசிறு படகுகளில் மக்கள் வந்து போகிறார்கள். காண்பதற்கு அரிய— கண்ணுக்கு இனிய காட்சி அது! உள்ளபடியே அது ஒரு வணிகக் கோட்டமாக இருக்கிறது. 12 மணி ஆனதும் அந்த ஆற்றுநீரை கடலில் வடிய விடுகிறார்கள். மாலையில் பழையபடி மணல்கால்வாய். நாளை மீண்டும் நீர் வரும் — அங்காடிகள் தோன்றும். அப்படியெல்லாம் அங்கு தங்கள் தங்கள் நாடுகளில் இயற்கையாய் அமைந்துள்ள வாய்ப்புக்களை அழகுப் படுத்திப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் ''

**19—9—67 சென்னை, கூவம் சீரமைப்புத் திட்டவிழாவில்...**



# எழுத்தாளர்களின் நிலை!

(34)

"மேலை நாடுகளில் ஒரே ஒரு புத்தகம் எழுதினாலே ஒருவர் தம் வாழ்நாளைக் கழித்துவிட முடியும்;—அதில்



கிடைக்கும் வருவாயைக் கொண்டு. இங்கோ ஓர் ஆசிரியர் ஒரு புத்தகத்தை வெளியிட்டார் என்றாலே, அந்தப் புத்தகத்தை அச்சிடுவதற்கு அவர் பட்ட கடனை அடைக்க முடியாமல் கடன்காரர்களுக்கு அஞ்சி குடியிருந்த வீட்டையே மாற்றிக்கொண்டு போய் விடுவார்கள். அப்படிப்பட்ட நிலை இங்கு இருக்கிறது. இங்கு புத்தகம் எழுதுவதும் அதன் மீது வருவாய் தேடுவதும் அவ்வளவு கடினம். புத்தகம் எழுதுவோரை மற்ற நாடுகளிலெல்லாம் வித்தகர்களாகப் போற்றுகிறார்கள். இந்த நாட்டிலோ 'புத்தகம் எழுதி, இருந்த பணத்தைப் பாழாக்கிக் கொண்டவர்கள்' என்ற பழிச்சொல்தான் கிடைக்கும்"

**20—9—67 சென்னை-மயிலை இராசேசுவரி மண்டபத்தில்...**

# மதுவும்—மனிதனும்

(35)

" மதுப்பழக்கம்—மனிதப் பழக்கம், வாழ்க்கை முறைகளை மட்டுமல்ல வாழ்க்கை நெறிகளையும் கெடுக்கிறது. காலா காலமாக நாம் குடிப்பழக்கத்தை ஒரு 'தீமை'யாகவே கருதி வந்திருக்கிறோமே தவிர 'பிரச்னை'யாக மட்டும் எண்ணியதில்லை. யாராவது தாறுமாறாக நடந்தால் வழக்கத்துக்கு மாறாக நடந்தால்கூட, என்ன குடித்திருக்கிறாயா? என்று கேட்பதுதான் நமது வழக்கம். நமது திரைப்படங்களிலும், நாடகங்களிலும்கூட நீங்கள் கவனித்திருக்கலாம்—கதாநாயகர்கள் குடிக்கமாட்டார்கள்; வில்லனாக வருபவர்தான் குடிப்பதாகக் காட்டப்படுவார். நல்லவர்கள் குடிப்பதில்லை; குடிப்பவர்கள் நல்லவர்களல்லர்; நல்லவர்களும் குடிக்கும்போது கெடுகிறார்கள்—இந்த உண்மையை அனைவரும் உணருகிறார்கள். உண்மை உணரப்படுகிறதே தவிர நடைமுறைக்கு வரக் கடினமாகத்தான் இருக்கிறது. மனிதர்களுக்குள் பெரியவராக இருந்த காந்தியடிகளே 'உண்மையிடம் வெற்றிக் கண்டதாக' கூறவில்லை. 'உண்மையிடம் சத்தியப் பரிசோதனை நடத்தியதாகத்'தான் சொல்லியிருக்கிறார். அந்த மேதைக்கே அப்படிப்பட்ட நிலை என்றால் சாதாரண மனிதர்களைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. எனவேதான் 'மதுப் பழக்கம் தீது' என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்திருந்த போதிலும் அதனை நடைமுறைக்குக் கொண்டுவரச் சட்டம் தேவைப்படுகிறது"

**21—9—67 சென்னை ராஜாஜி மண்டபத்தில்...**

# நமது நாட்டினரும்—கதைகளும் !

(36)

" அவர், கடலை அடக்கினார்; காற்றை விரட்டினார். கருநாகத்தை மாலையாக அணிந்தார்; கந்தமூலமே அவருக்கு உணவு; தொட்டார், பட்ட மரம் துளிர்த்தது; பார்த்தார், மலடி தாயானாள்; குருடன் பார்வை பெற்றான்; இப்படிப்பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடு நமது நாடு! இந்த 'மகிமை'களையும் 'அற்புதங்'களையும் வியந்து



பேசுவது, பிறகு எதற்குப் பயன் படுகிறது? "அவர் மகான், ஆகவே அப்படிச் செய்தார். நாம் சாமான்யர்கள் நம்மால் முடியுமா ? அவர் செய்ததைச் செய்ய ?" என்று பேசி நமது செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக் கொள்ளவே அது மெத்தவும் பயன்படுகிறது' '

**2—10—67** சென்னை வானொலியில் ...

# நாடும்—கிராம மக்களும்

(37)

“நாடு வாழவேண்டுமென்ருல், கிராம மக்கள் வசதிகளைப் பெற்று வாழ வழி அமைத்துத்தர வேண்டும். கிராம மக்கள் நகரத்தில் ஏன் குடியேறுகிருர்கள் என்ருல் கிராமத்தில் போதுமான வசதிகள் இல்லை. குடிநீர் வசதி, பள்ளிக்கூடம் இல்லை. அதனுல் தான் கிராம மக்கள் இலட்சக் கணக்கில், வசதி பெற்ற நகரங்களுக்கு வந்து விட்டார்கள். இப்போது கிராமம் முன்னேறி அதை ஒளியேற்ற எண்ணி அவை நடந்து — வேகமாக மாறி வருவதால் இன்று நகரத்தில்உள்ள மக்கள் கிராமத்



திற்கு வந்து விவசாயத் தொழில் புரிய முன் வர வேண்டும். அப்பொழுதுதான் கிராமம் முன்னேறும்; கிராமம் முன்னேறிஞல்தான் நாடும் முன்னேறும்”

**13—10—67 செங்கற்பட்டு பழையசீவரத்தில்...**

# காங்கிரசுக் கட்சியினரும்—
# பொதுமக்களும்

(38)

• "மக்கள் போதையுள்ளவர்கள் ; விவரம் அறியாதவர்கள் என்று காங்கிரசுக்காரர்கள் நினைக்கிறார்கள்; சொல்லுகிறார்கள். 'மக்கள் விவரம் அறிந்தவர்கள், எல்லாம் தெரிந்தவர்கள்' என்று நாங்கள் நினைக்கிறோம்;



சொல்கிறோம். அவர்கள் சொல்வது போல் தமிழகத்தில் காங்கிரசைத் தோற்கடித்தது போதையால்தான் என்பதை ஒப்புக்கு வைத்துக்கொண்டு பார்த்தாலும் கேரளத்தில் காங்கிரசு தோற்றதே—எதனால்? பாபுராசேந்திரபிரசாத் பிறந்த பீகாரில் காங்கிரசு தோற்றதே—எ த னா ல்? சுபாஷ்சந்திர போசை தொட்டிலிட்டு வளர்த்த வங்காளத்தில் காங்கிரசு தோற்றதே—எதனால்? வெள்ளையனின் ஈட்டி முனைக்கு மார்பு காட்டிய லாலாலஜபதிராய் தோன்றிய பாஞ்சாலத்தில் காங்கிரசு தோற்றதே—எதனால்? காங்கிரசாராலேயே உருவாக்கப்பட்ட அ ரி யா ன மாநிலத்தில் காங்கிரசு தோல்வி கண்டதே—எதனால்? 'இந்தியாவின் இதயம்' என்றும் 'பண்டித ஜவகர்லால் நேரு—மோதிலால் நேரு—லால்பகதூர் சாஸ்திரி—இந்திரா காந்தி ஆகியோர் தோன்றிய மாநிலம்' என்றும், முன் பொரு காலத்தில் 'சுயராஜ்யத்தின் திறவு கோல்' என்

றும் வர்ணிக்கப்பட்ட உத்தரப்பிரதேசத்திலேயே காங்கிரசு தோல்வி கண்டதே—எதனுல்? என் பேரிலுள்ள கோபத்தினுல் 'இந்தியாவின் பெரும்பகுதி மக்கள் போதையில் உள்ளவர்கள் என்று பேசுவது? அப்படி ஒரு நாட்டில், காங்கிரசாரின் இருபதாண்டுகால ஆட்சிக்குப் பின்னர் எல்லோரும் போதை உள்ளவர்களாக, தெளிவில்லாதவர்களாக இருக்கிருர்கள் என்ருல் இந்த நாட்டிலேயே காங்கிரசார் இருப்பதற்கு அருகதையற்றவர்கள் என்பதுதான் பொருள். இப்படி நாட்டுமக்களை இழிவுபடுத்துகிற எதேச்சாதிகார இயல்பு, அரசியல்ஆணவம் காங்கிரசுக்காரர்களை விட்டு இன்னும் போகவில்லை என்பதைத்தான் இந்தப் பேச்சு காட்டுகிறது''

**15—10—67 சென்னை மயிலை கூட்டத்தில்...**

# தேர்தலும்—அரசியல்வாதிகளும்

(39)

"பொதுவாக எல்லாத் தேர்தல்களும் சாதாரணப் போக்கில்தான் நடைபெறவேண்டும். அதற்காக ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிடக்கூடாது. தேர்தலிலிருந்து பரபரப்பு நீக்கப்படவேண்டும். பொதுமக்களைப் பின்னால் தள்ளிவிட்டு அரசியல் வாதிகள்தான் முன்னால் நிற்கிறார்கள். பொதுமக்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேர்தல் விவகாரங்களில் சூடு தேவையில்லை; வீணான



ஆரவாரங்கள் தேர்தலுக்குப் பின்னும் பல மாதங்கள் நீடித்து வேறுவிளைவுகளைக் கொடுத்துவிடும். அரசியல் விளைவுகள் கரடுமுரடாக அமையக்கூடாது. அரசியலில் மென்மைப்போக்குத்தான் தேவை—அவசியம்! இதில் அரசியல்வாதிகள் தேர்ச்சி பெறவில்லையென்றால், அரசியல், நல்லவர்கள் கரங்களை விட்டுப் பொல்லாதவர்கள் கைகளில் போய்ச் சேர்ந்துவிடும்."

**19—10—67** சென்னையில், செய்தியாளர்களிடையே...

# ஐ. நா. மன்றமும்—நாடுகளும்

(40)

"ஐ. நா. அமைப்பு பலவீனமடைந்திருக்கிறது என்ருல் அதற்குக் காரணம் நாம் பலவீனமாயிருப்பதுதான்—நாடுகள் பலவீனமாயிருப்பதுதான்; அவை, கொள்கை பலமற்றவையாய் இருப்பதுதான்—அவை நேர்மையற்றவையாய் இருப்பதுதான்! நமது மன உறுதியும் பலமும் மட்டுமே மனித குலத்தின் நம்பிக்கைக்கு—உலக நீதியின் அரணுக்கு உயிர்நாடியாக இருக்கமுடியும். இந் நாட்டிலுள்ள நாமும் ஐ. நா.வைப் பலப்படுத்த உத்தேசிக்



கிருேம். இந்த நிறுவனத்தின் பின்னணி—வரலாறு—அமைப்பு ஆகிய விவரங்கள் அனைத்தையும் மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்வது அவசியம். சமாதானத்தையும், நீதியையும், இணக்கத்தையும், மகிழ்ச்சியையும், மறுக்க முடியாத ஓர் இலட்சியத்தையும் பிரசாரம் செய்யும் தன்மையான—ஆனல் தோல்வியடையாத இந்த அமைப்பையும் அதில் பொதிந்துள்ள கொள்கையையும் அனைவரும் பின்பற்றினுல் அதை 'மனித குலத்துக்கான மாபெரும் அமைப்பு' என வாழ்த்தி வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. தமிழர்களாகிய நமக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'யாதும் ஊரே—யாவரும் கேளீர்' என்று நமது கவிஞர் பாடி இதைத்தான் கற்பித்தார். ஆகையால் நாம் இந்த நிறுவனத்துக்கு உறுதுணையாக நின்று—வழிவழியாய் வந்த நமது இலட்சியத்தை எய்துவதில் உதவி புரிவோமாக."

**23—10—67 சென்னை வானெலியில்...**

# ‘தரம்’ என்பதே காலத்திற்கேற்ப மாறுவதுதான்!

## (41)

“ஒரு காலத்தில் ‘தரம்’ என்று கருதப்பட்டது மற்ெருரு காலத்தில் மறுக்கப்படலாம். ‘தரம்’ என்பதே காலத்துக்குக் காலம் மாறுவதேயாகும். இப்போதைய கல்விக்கும், முன்பு இருந்த கல்விக்கும் வித்தியாசம்



தரத்தில் அல்ல, வகையில் தான் வித்தியாசம். ரேடியோவை இயக்க நான் என் 35–வது வயதில்தான் தெரிந்து கொண்டேன். ஆனால் என் 3 வயதுப் பேரன் ரேடியோவை இயக்குகிறான். இயக்க வேண்டிய நேரம் வந்ததும் ரேடியோ—வை என்று தன் மழலை மொழியில் கூறுகிறான். முன் காலத்தில் மனிதன் கோயில் மணியோசையைக் கேட்டு நேரத்தை அறிந்தான். இன்றைய மனிதன் ஆலையின் சங்கொலி கேட்டு நேரத்தை அறிந்து கொள்கிறான். இவனுக்கு கோயில்மணியோசை காதில் விழாத அளவுக்கு இவன் தரம் குறைந்து விட்டது என்று சொன்னால் அது எப்படி சரியாகும்.”

**11—12—67** **சென்னை, சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளி விழாவில்....**

# சிறந்த ஓர் தலைவனின் இலக்கணம்

## (42)

"ஒரு தலைவர் அறிவாளியாயிருக்கலாம். ஆனால் மற்றவர்களையும் அறிவாளியாக்குபவர்தான் மிகச் சிறந்த தலைவர்! ஒரு தலைவர் உறுதி படைத்தவராக இருக்கலாம். ஆனால் மற்றவர்களையும் தன்னைப் போலவே உறுதி படைத்தவராக ஆக்குபவர்தான் மிகச் சிறந்த



தலைவர்! ஒரு தலைவர் தெளிவுள்ளவராக இருக்கலாம்; ஆனால் குழப்ப மிகுந்த வேளையில் தெளிவைக் காட்டுவதோடு பிறரையும் தெளிவுள்ளவராக்குபவர்தான் தலை சிறந்த தலைவர்! சிலர் நல்ல பேச்சாளர் என்ற முறையில் புகழை நிலை நாட்டுவார்கள்; சிலர் நல்ல எழுத்தாளர் என்ற முறையில் புகழை நிலைநாட்டுவர்; சிலர் நியாயத்துக்கு நல்ல முறையில் போராடுவோர் என்பதில் புகழை நிலைநாட்டுவர்; சிலர் நிர்வாகத்தில் சிறந்தவர் என்ற முறையில் புகழை நிலைநாட்டுவர்; சிலர் பிரச்னைகளை நல்லமுறையில் விளக்கி தெளிவுபடுத்துபவர் என்ற முறையில் புகழை நிலைநாட்டுவர். ஆனால் வெகு சிலருக்குத்தான் தேர்ந்தெடுத்த துறை ஒவ்வொன்றிலும் தனிச் சிறப்பை ஏற்படுத்தும் ஆற்றல் இருக்கும். அத்தகைய ஆற்றல் பெறுவதுதான் ஒரு சிறந்த தலைவனின் இலக்கணமாகும்"

**26—12—67 சென்னையில், ராஜாஜி விழாவில்...**

# பொருட்காட்சிகளின் முக்கியத்துவம்

(43)

'பட்டணத்திலுள்ள 10 படித்தவர்கள் அறிய வேண்டுமென்பதற்காக பொருட்காட்சி நடத்துவதைவிட மற்றவர்களுக்கு—குறிப்பாக கிராம மக்களுக்கு உலக அறிவு ஊட்டக் கண்காட்சிகள் நடத்தப் பட வேண்டும். கிராம மக்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லை என்றால் அது நாட்டை வாழ வைக்காது; வளர வைக்காது. 100க்கு 80பேர் கிராம மக்கள்; 10 பேர் பட்டணத்தில்; 10 பேர் கிராமத்திற்கும் நகரத்திற்கும் உழன்று கொண்டிருப்பவர்கள். நகரத்திலுள்ளவர்கள் உலக அறிவு பெறுவதற்கும், அதையே கிராமத்தில் உள்ளவர்கள் பெறுவதற்கும் உரிய வாய்ப்பு—பெரும் வித்தியாசநிலையில் உள்ளது. இந்த வித்தியாசங்களைப் போக்க கண்காட்சிகள் சிற்றூர்களில் நடத்தப்பட வேண்டும். அதன் மூலம் உலகத்தின் வளர்ச்சியை கிராம மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்."



**28—12—67 மதுராந்தகம் (தமிழ்நாடு)**
**கண்காட்சி விழாவில்...**

# தம்பீ !—கடமை ! கடமை ! கடமை !

(44)

"தம்பீ ! ஒரு நிலைக்கு ஆட்பட்டுவிட்டிருக்கிறேன்—உன் ஆணை காரணமாக—நான் மேற்கொண்டு விட்டுள்ள ஒரு கடமையுடன் பிணைக்கப்பட்டிருக்கிறேன். தேவையற்றது என்றும் கூறமாட்டேன் ; தேனென இனிக்கிறது என்றும் கூறமாட்டேன் ; ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்றித் தீருவார் என் அண்ணன், பாரீர் ! பாரீர் ! — என்று ஊரெல்லாம் தம்பி ! நீ கூறியபடி இருந்திடுவது தெரிகிறதே. நான் அந்த உன் உணர்வுக்கு ஏற்றபடி பொறுப்பினை நிறைவேற்றியாகவேண்டுமே ; இல்லையென்றால்



"என்னடா வீரனே ! ஏதேதோ பேசிக்கொண்டாயே உன் அண்ணனைப் பற்றி ! அவன் இலட்சணம் இவ்வளவுதானா !" என்று எங்கேனும் எவரேனும் ஒரு சுடுசொல் கூறிடின் துடிதுடித்துப் போவாயே ; அதனை உணர்ந்திருப்பவனல்லவா உன் அண்ணன். ஆகவே சாலையில் தங்காமல் சோலை கண்டு மயங்காமல், ஓடையில் நீந்த நினைக்காமல் ஓய்வினை நாடிடாமல் கடமை ! கடமை ! கடமை ! என்று ஓடியபடி உள்ளதே நீராவியால் உந்தப்படும் ஊர்தி ! அதுபோல ஒவ்வொரு நிமிடமும் பணியாற்றியபடி இருக்கிறேன். கடினம் இல்லை என்று கூறுவதற்கில்லை ; வெற்றி இல்லையென்று கூறுவாரும் இல்லை."

—1967, 'காஞ்சி' மூன்றும் ஆண்டு மலர்

# தமிழ் மொழியின் அருமையும் பெருமையும்

**(45)**

" தமிழ் மொழியின் அருமையை ரஷ்ய நாட்டினரும், செக்கோஸ்லாவிய நாட்டினரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே அது சரவர உணரப்படவில்லை. இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ், ஆராயப்படுகிறது



என்று அறியும் நேரத்தில் அத்தகைய தமிழுக்கு நாம் சொந்தக்காரர்கள் என்கிறபோது நமது நினைவு எங்கோ செல்கிறது. எங்கோ நம் நினைவு செல்கிறது என்று கூறினேனே, அந்தத் திருவிடத்திற்கு நாம் நிச்சயம் செல்வோம். இங்கிலாந்திலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி மிக அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில் அதன்மீது நமக்கு பற்று, பாசம் ஏற்படாமல் எப்படி இருக்கும்? அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது—எந்த நோக்குடனாவது - எப்படிப்பட்டவர்களிடமிருந்தாவது தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால் அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது "

**3—1—68, உலகத்தமிழ் மாநாடு ஆரம்ப விழாவில்**
**(சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரை)...**

# தமிழ்ப் பண்பாடு

## (46)

" தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும். ஆனால் தமிழர்கள் தமக்கென்றுஉள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்."



**3—1—68,** உலகத்தமிழ் மாநாடு துவக்கவிழாவில்...
(சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரை)

* * * *

# மாணவர்கள் என்றால் யார் ?

## (47)

"மாணவர்கள் என்றால் யார் ? அவர்கள் நமது ரத்தத்தின் ரத்தம்—நமது சதையின் சதை; நமது குடும்பத்தின் பிள்ளைகள்; நமது எதிர்கால உருவங்கள். அவர்கள் ஒன்றை (நன்மையை) விரும்புகிறார்கள் என்றால் என்னால் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நான் நிறைவேற்றிக்கொடுக்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டியது ஜனநாயகக் கடமை என்று கருதுகின்றேன்."

**23—1—68** தமிழகசட்டமன்ற பேரவையில், இந்தி ஒழிப்புத் தீர்மான உரையில்...

# கற்பதில் மூன்றுவகை

## (48)

" தமிழ்க் கவிதைகளை—தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகையில் :

ஒன்று : நூலிலுள்ள அருமை பெருமை—நூல் நயம்—இலக்கணச்சுவை கண்டு, படித்து இன்பம் பெறுவது.

• இரண்டு : அந்த இலக்கியத்தை பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிறநாட்டாரும் உணரச் செய்வது.

மூன்று : அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.

ஏடுகளிலுள்ள நயம் எண்ணி மகிழ்வது என்றால் —அது புலவர் குழுவோடு நின்றுவிடும். பிற நாட்டார் நமது ஏடுகளை அறிந்து கொள்வதற்கு என்றால்—அது கருத்தரங்கோடு நின்றுவிடும். இதில் சமுதாயத்திற்கு என்ன பயன் என்று ஆராய்வதுதான் முக்கியம். இந்த வழியில் தமிழ்நெறியோடு புலவர்கள், தமிழ்மக்களை உடனிருந்து அழைத்துச் செல்ல வேண்டும்."

**5—1—68, சென்னை, "பூம்புகார் நகர்" விழாவில்....**

# சிறுசேமிப்பும்—அரசாங்கமும்

(49)

" நிதிவசதிகளைத் திரட்டுவதற்காக புதுவரிகளை விதிப்பதென்பது அரசாங்கத்துக்கு எளிதுதான். ஆனால் அவ்வாறு செய்வது தர்ம நியாயமான கோட்பாடுகளுக்கு முழுதும் இசைந்ததாக இருக்காது. மக்கள் தரும் சிறு சேமிப்புக்களைக் கொண்டு திட்டத்துக்கான பணத்தைத் தேடிக் கொள்வதுதான் நியாயமாகும். அரசாங்கம் நிதிவசதியைக் கோரினால் உடனே மக்களின் மனத்தில் " அதிகாரத்தின் அடிப்படையில் கேட்கிறார்கள் " என்ற தவறான எண்ணத்தை உண்டாக்கி விடும். எல்லாம் பொது நன்மைக்காகவே என்று மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். பிற்காலத் தலைமுறையினருக்காக-இளம் சந்ததியினர்க்காக திட்டங்களை நிறைவேற்ற, நிதிவசதி தேவைப்படுகிறதென்பதைத் தெளிவுறுத்த வேண்டும். அப்போது தான், தானாகவே இயக்கத்தில் வேகம் பிறக்கும். சிறு சேமிப்பு இயக்கத்தை பிரசாரம் செய்யசிறு சிறு திரைப்படங்களை எடுத்துக் காட்டுவதும் சிறுசேமிப்பு இயக்கம் மக்களிடையே நன்குபரவ வழிஏற்படும்."



**5—1—68, சென்னை, ராஜாஜி மண்டபத்தில்...**

# ஒற்றுமை ஒரு பசுஞ்செடி !

## (50)

"ஒற்றுமையை வளரும் பசுஞ்செடிக்கு நிகராகக் கருதி ஒரு சீராகத் தண்ணீர் விட்டுப் பேணி வந்தால் மட்டுமே அது வளரும். அதை விட்டு தண்ணீரும், வெண்ணீரும் மாற்றி மாற்றி ஊற்றினுல் செடியின் நிலைஎன்ன ஆகும் ? இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டும்; அதன்வலிவு வெல்லற்கரியதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிருேம். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதெப்படி ? சட்டத்தின் மூலமோ, கட்டளையின் மூலமோ, குடியரசுத் தலைவரின் உத்தரவின் மூலமோ ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது. ஒற்றுமை என்பது உள்ளம் சம்பந்தப்பட்ட ஒன்ருகும். நமது எண்ணங்கள் ஒன்றிணைந்திட, செயல்பட வேண்டும். வெறும் உதட்டளவுப் பேச்சினுல் ஒற்றுமை வந்து விடாது."



7—1—68 சென்னை, சீக்கியர்கோவில் விழாவில்...

# உலகின் இயற்கை வளமும்—
# மனித இனமும்!

(51)

"உலகில் எல்லோரும் வளமை பெற உதவிட வேண்டியது மேம்பாடு அடைந்த நாடுகளின் கடமை யாகும். நாடுகள் பல வளர்ச்சியடையாத ஒரு நிலையில் பொருள்களை ஏராளமாக, மேம்பாடு அடைந்த நாடுகள் உற்பத்தி செய்து குவிக்குமானால் அவற்றை வாங்குவார் யார்? 'வெண்டல் வில்கி' என்ற அமெரிக்கப் பெருமகன் ஓருலகம் என்று சிந்தித்துக் கருத்தை எடுத்துரைக்கிறார். இதை மனத்தில் கொள்ள வேண்டும். உலகில் உள்ள



இயற்கைவளமனைத்தும் மனிதஇன முழுமைக்கும் பயனளிக்கும்வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். செல்வமோ, செழிப்போ அவை மக்களால் உணரப்படவேண்டும். உழைக்கும் தொழிலாளிக்கு உரிய பங்கினை அளித்திட வேண்டும். இவை மறுக்கப்படுகிற எந்த ஒரு அமைப்பையும், முறையையும் உலகம் வரவேற்காது என்பதோடு சகித்துக்கொள்ளவும் மாட்டாது."

**21—1—68,** சென்னையில், உலகத்தொழில் வர்த்தகக் கண்காட்சி தலைமையுரையில்....

# தி. மு. க.வின் பிரசார வலிமை!

(52)

"நாங்கள் பிரிவினைப் பிரசாரம் செய்தபொழுது, அது மக்கள்செவியில் விழக்கூடாது என்று காங்கிரசுக் காரர்கள் பலமான பிரசாரம் செய்தார்கள்; அதில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. நாங்கள் பிரிவினைக்கான காரணங்களைச் சொன்னபொழுது அரசியல் சட்டத்தைத் திருத்தித்தான் எங்கள் பிரசாரத்தை நிறுத்த வேண்டியிருந்ததே தவிர, அறிவுப் பிரசாரத்தினால் மக்களைத் தங்கள் பக்கம் இழுக்க அவர்களால் முடியவில்லை. நாடாளுமன்ற வரலாற்றிலேயே ஒருவருடைய பேச்சுக்காக அரசியல்சட்டம் திருத்தப்பட்டது இதுதான் முதன்முறை என்ற அளவுக்குப் பிரிவினைப் பிரசாரம் தடுக்கப்பட்டது! இது எங்கள் சாமர்த்தியத்துக்கு அடையாளம் என்றோ—அவர்கள் திறமைக் குறைவுக்கு அடையாளம் என்றோ சொல்லவில்லை. நாமெல்லாம் ஒருவருக்கொருவர் நண்பர்கள். நாங்கள் பிரிவினைப் பிரசாரம் செய்தபொழுது நாட்டு மக்களிலே வெகுசிலர் 'இது நியாயம்' என்று உணர்ந்தார்கள். ஆகவே எங்கள் பிரசாரத்திற்கு வலிவும், காங்கிரசுக்காரர்கள் எங்களுக்கு எதிராகச் செய்த பிரசாரத்திற்கு வலிவற்ற தன்மையும்தான் கிடைத்தது!!"

**23—1—68,** தமிழக சட்டமன்ற பேரவையில்....

# இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்!

## (53)

"பல்வேறு மொழி—பண்பாடுகளைக் கொண்ட இந்தியாவில் ஒரேமொழி ஆட்சியை ஏற்படுத்தி—ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் குலைக்கும் வகையிலும், ஒரு மொழியை இன்னொரு மொழி அடிமை கொள்ளும் வகையிலும் ஏற்பட்டுள்ள நிலையை மாற்றி—தமிழும், பிற தேசிய மொழிகளும் ஆட்சிமொழிகளாகவும், அவை ஆட்சி மொழிகளாக ஆகும்வரை ஆங்கிலம் நீடிக்கவும் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும். நிறைவேற்றப் பட்டுள்ள மொழிச் சட்டம் இந்தியாவைப் பிளவு படுத்தும் வகையிலும், அரசியல் வெறுப்பும், குழப்பமும், வேதனையும் உண்டாக்கும் வகையிலும் இருப்பதுடன் 'நாடு இரு பிரிவுகளாகி விடுமோ' என அச்சமும் ஏற்பட்டுள்ளது. இந்தச் சட்டம் இந்திபேசாத மக்களுக்கு அநீதியும், சங்கடமும், புதிய பளுவும் ஏற்படுத்துவதாக பல அரசியல் கட்சியினரும் ஒருமித்த கருத்தறிவித்திருப்பதால், இச்சட்டத்தை உடனடியாக நீக்கிவிட இம்மன்றம் (தமிழக சட்ட மன்றம்) வற்புறுத்துகிறது".



23—1—68 தமிழக சட்டமன்ற பேரவையில்....

# சிறை என்ன செய்யும் ?

## (54)

"நான் எம். ஏ. படித்த இளைஞனாக இருந்த போதும் சிறை சென்றிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினனாக இருந்த போதும் சிறை சென்றிருக்கிறேன். மாநிலங்களவை உறுப்பினனாக இருந்தபோதும் சிறை சென்றிருக்கிறேன். இப்பொழுது அமைச்சனாக இருக்கும்பொழுதும்



காங்கிரஸ் நண்பர்களால் சிறை செல்லும் வாய்ப்புக் கிடைக்குமென்றால் மிக்க மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக் கொள்வேன். அது என் வாழ்க்கை வரலாற்றிலேயே வசீகரமான அத்தியாயமாக இருக்கும். ஆகவே 'சிறை' என்னை மிரட்ட முடியாது. அவர்கள் இன்னொன்றும் செய்யக் கூடும். 'இந்தியைப் பள்ளிகளிலிருந்து நீக்கியது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதல்ல' என்று சொல்லி தமிழகஅரசைக் கவிழ்க்க காங்கிரசு உறுப்பினர்கள் முயன்றால் அதற்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன். நான் மட்டுமன்றி கழகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும், மத்திய அரசு என்ன கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்வது என்ற முழு உறுதியுடன்தான் நாங்கள் இருக்கிறோம்."

**25—1—68 சென்னை நேப்பியர் பூங்கா வீரவணக்கப் பொதுக்கூட்டத்தில்...**

# கூட்டுறவுத்துறையின் வெற்றி?...

## (55)

"ஒரு சிலரின் பிடியில் கூட்டுறவுத்துறை சிக்கி விடக்கூடாது! எழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில் சட்ட திட்டம் இருக்கவேண்டும். கட்டிடத்தைத் தாங்கிட தூண்கள் தேவை. அந்தத் தூண்களும் போதுமான அளவு பருமனுடன் இருந்தால்தான் கட்டிடத்திற்கும் பலன்; பார்ப்பதற்கும் அழகாக இருக்கும். அவ்



விதம் இல்லாமல் தூண்கள் வேண்டுமென்பதற்காக அளவைக் கணிக்காது தூண்களை நிறுத்தினால் கட்டிடத்தின் அழகும் போய்விடும்; இடமும் இருக்காது. இப்போதுள்ள சட்டத்திட்டம் பழங்காலத்தில் ஏற்படுத்தியது. இந்தக் காலத்தின் தேவைக்கேற்ப அவற்றை மாற்ற வேண்டும். 18-வது நூற்றுண்டிலிருந்த 'கோச்'வண்டிக்கு கிண்டிரேஸ் குதிரையைப் பூட்டி ஓட்டினால் வண்டிக்குச் சேதமா—குதிரைக்குச் சேதமா? —என்ற நிலைதான் ஏற்படும். ஆகவே இக்காலத்தின் தேவைக்கேற்ப கூட்டுறவுத் துறையின் சட்டத் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும். அதில்தான் கூட்டுறவுத் துறையின் உண்மையான வெற்றி அடங்கியுள்ளது.''

**5—2—68 காஞ்சிபுரம் கூட்டுறவு பாங்கியின் கட்டிடத் திறப்பு விழாவில்...**

# தமிழக விவசாயிகளின் பெருமை!

(56)

"தமிழகத்தின் விவசாயிகள் முற்போக்கானவர்கள். எத்தகைய நவீன விவசாய முறையானாலும் அவற்றை ஏற்று செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை. 'மாறியநிலைக்கேற்ப வசதிகளைக் கொடுத்திடுக' என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள். நாம் முன்னேற்றப் பாதையில் செல்கிறோம். பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் நீர் தாதுச்சத்துக்கள் குறைந்தது என்று விவசாயிகளிடத்தில் நிலவுகின்ற அவநம்பிக்கையைப் போக்க வேண்டும். ஒரு காலத்தில் இரசாயன உரத்தைப்பற்றிக்கூட இப்படித்தான் கருதப்பட்டது; இன்று



அந்த நிலைமையில்லை. 'கலப்பு உரமா அதை நாங்களே தயாரித்துக் கொள்கிறோம், தேவையானதை மட்டும் எங்களுக்குக் கொடுத்துதவுங்கள்' என்ற அளவுக்கு நமது விவசாயிகளிடம் உரத்தைப் பற்றிய அறிவு வளர்ந்துள்ளது"

**7—2—68 சென்னையில், தீவிர சாகுபடித்திட்ட அதிகாரிகளின் மாநிலக் கருத்தரங்கில்...**

# உழவுத் தொழிலின் முன்னேற்றம்...?

(57)

"உழவுத் தொழிலில் மாடுகளுக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குகின்ற காலத்தை நோக்கி நாம் வேகமாக நடைபோடவேண்டும். அந்த வேகமான நடையில்தான் நாட்டின் உணவுத் தேவை பூர்த்தியாகவும், அதில் பெரும் வெற்றி பெறவும் முடியும். நெடுங்காலமாக அமெரிக்காவில் குதிரைகளை வைத்து உழவுத் தொழிலை நடத்தி வந்தார்கள். அது போல் பிரிட்டனிலும் குதிரைகள் விவசாயத்திற்குப் பயன்பட்டன. அரேபியாவில் ஒட்டகத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் அங்கெல்லாம் இன்று இயந்திர முறையில் உழவுத் தொழில் செய்யப்படுகிறது. ஆகவே நமது நாட்டின் ஒவ்வொரு விவசாயியும் டிராக்டர் போன்றவை இல்லாவிட்டாலும் இயந்திரக் கலப்பைகளை— விசை ஏர்களை பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி முன்னேற வேண்டும்"

**8—2—68 சென்னை—பெரம்பூரில், பொங்கல் விழாவில்...**

# கலைத்துறையின் சிறப்பு

(58)

"கலையுலகில் எனக்கும் கருணாநிதிக்கும் நாங்கள் அமைச்சர்களாவதற்கு முன்பிருந்தே பன்னெடுங்கால மாக தொடர்பு உண்டு! அமைச்சர்களானதற்குப் பிறகு அந்தத் தொடர்பு கொஞ்சம் குறைந்திருக்கிறதென்றா லும் நெஞ்சத்திலே அத்தொடர்பு என்றென்றும் இருக் கும். அதை இழக்கும் திட்டமுமில்லை; எண்ணமுமில்லை.

கலைத்துறையின் மூலம் சீரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன் நான். முற்போக்கு நாடுகளெல் லாம் இதில் நம்பிக்கை வைத்திருக்கின்றன. இது ஒரு தொழில்—வருமானம் பெறும் சாதனம் என்றில்லாமல் நாட்டுக்கு நற்கருத்துக்களைத் தரும் சிறந்த துறையாகும்"

**12—2—68, சென்னை ராஜாஜி மண்டபத்தில்...**

# மொழிப் பிரச்னே !...

## (59)

"மொழிப் பிரச்னே என்பது சிறிய பிரச்னே அல்ல! இட்டுக்கட்டும் விஷயமும் அல்ல! தட்டிக்கழிக்கக்கூடிய பிரச்னேயும் அல்ல! எல்லோருடைய மனதையும் ஈர்க்கக் கூடிய பிரச்னே இது. இப்பிரச்னேயைப் பொறுத்தவரையில் திராவிடமுன்னேற்றக்கழகம் தன்னுடைய முப்ப தாண்டுக் காலக் கருத்திலிருந்து விடுவித்துக் கொள்ள வில்லே. கருத்தை மாற்றிக்கொள்ளவுமில்லே. அதே கருத்தைத்தான் இன்றும் வலியுறுத்திக்கொண்டு வருகிறது. இதுபோன்ற பிரச்னேகளில் அடக்குமுறைகளேக் கையாளுவது என்பது சரியான வழியல்ல; அடக்குமுறையிஞல் மட்டும் அமைதியை ஏற்படுத்திவிட முடியாது. அடக்குமுறைகளுக்குப் பின்னரும் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டு வருவதை இந்தியாவின் பல பகுதிகளிலும் பார்க்கிரேம். "அசாம் அசாமியருக்கே! இந்தியர்களே வெளியேறுக!" என்றும், அசாம் மாநிலத்தில் சுவரொட்டிகள் எங்கும் காணப்படுவதாக நான் அறிகிறேன். ஆகவே அடக்குமுறையிஞல் எந்த உணர்ச்சியையும் அடக்கிவிடலாம் என்பது தெளிவான முடிவு அல்ல"

**21—2—68 தமிழக சட்டமன்ற மேலவையில்...**


# நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம்!

(60)

''நமதுநாடு தொழில்துறையில், பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்னணியில் நிற்கிறது; எனினும் வளம் குறைந்த நாடா இது? இல்லை! பெட்ரோலியம் இல்லாத நாடுகள் உண்டு; இரும்பு இல்லாத நாடுகள் உண்டு; நிலக்கரி இல்லாத நாடுகள் உண்டு; மற்ற கனிவளங்கள் இல்லாத நாடுகள் உண்டு! ஆனால் நம் நாட்டிலோ எல்லாவகைக் கனிவளங்களும் உண்டு! தோண்ட வேண்டிய கனிச்சுரங்கங்கள்; கட்டவேண்டிய கப்பல் துறைகள் இன்னும் இருக்கின்றன. ஆகவே ஏராளமான வளத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும்—நமது வளத்திற்கேற்ப முன்னேறவில்லை! நமது தேவைக்கேற்பவும் முன்னேறவில்லை!! ஆகவே எக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த அரசியல் கொள்கையை உடையவராக இருந்தாலும் நமது திறமையை—உழைப்பை ஒன்றுபடுத்தி ஆக்கப்பணியில் செலுத்தினால் நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம். இரண்டாம் உலகப் போரில் (அதுவே கடைசிப் போராகவும் இருக்கட்டும்) அழிந்த நாட்டினர் (உதாரணத்திற்கு ஜப்பான் நாடு) பெரும் சேதத்திற்கு ஆளானபோதும் பத்துப்பதினைந்தே ஆண்டுகளில் கடுமையான உழைப்பினால் பழைய நிலையை அடைந்தார்கள். அது மட்டுமல்ல நம்மைப் போன்றவர்களுக்கும் உதவ முன்வருகிறார்கள். அந்த உணர்ச்சிதான், எழுச்சிதான் நமக்குத்தேவை''

22—2—68 ''தமிழக நாள்'' விழாவில்...
(சென்னையில் நடைபெற்ற அனைத்துலக பொருட்காட்சி)



கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக —குறள்

## எமது அடுத்த வெளியீடு

(அனைத்தும் அச்சில் உள்ளன)

திருக்குறள் இன்னிசை
அயல் நாடுகளில் அமைச்சர் முத்துசாமி
தெரிந்துகொள் தம்பி
தமிழினத்தை வாழவைத்தவர்கள்
வெற்றி நடை
முதன் முதலில் (2–வது தொகுதி)
இன்ப வாழ்வு (திருமணப் பரிசு நூல்)
நினைவுக்கு...
அறிவியக்க வாதிகள்
இறந்தவரோடு பேச...
தாய்க்குலம் வாழ...
தமிழென்றால்....
அரசனும் ஆண்டியும்
புத்தகச் சீரமைப்பு (பைண்டிங்)
ஔவையார் (படக்கதை)
தமிழகத்தில் பனைச் செல்வம்
இலக்கியத்தில் கல்வி
அண்ணாவும் குறளும்